# TAMIL READING BOOK.

# பள்ளிக்கூடங்களிற்

பயிற்றுவிக்கவேண்டிய

தமிழ்

# வாசகபுத்தகம்.

௩ஆ சருக்கம்.

இது

திருநெல்வேலியிலுள்ள

சார்ஜென்றையராலே

செய்யப்பட்டது.

இவற்றுள்ச் சிலமுன் எழுதப்பட்டுஞ் சில திருப்பப்பட்டும்
மற்றவை புதிதாய் எழுதப்பட்டிருக்கின்றன.

**Second Edition.**

MADRAS: PRINTED BY REUBEN TWIGG, AT THE CHRISTIAN
KNOWLEDGE SOCIETY'S PRESS, VEPERY.

1848.

# க. பாடம்.

## கல்வியைக்குறித்துச்சொல்லியது.

கல்வி கரையில் கற்பவர் நாள்சி..............ல
மெல்ல நினைக்கிற் பிணிபல தெள்ளி.......தி
னாராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழிய ..ப்
பாலுண் குருகிற் றெரிந் ..................து
[நாலடியார்.]

---

பிள்ளைகள் அறியவேண்டிய காரியங்கள் இவ்வுலகத்தில் அநேகமுண்டு. அவைகளில் அநேகம் முற்காலங்களில் நடந்தவைகளானபடியால் அவைகள் அடங்கிய புத்தகங்களை வாசித்து அறிந்துகொள்ள வேண்டும். மேலும் அந்தக்காரியங்கள் வெவ்வேறான இடங்களில் நடந்தவைகளானபடியால் அவ்விடங்களிலுள்ளவர்கள் எழுதியிருக்கிறவைகளையும் படித்தறியவேண்டும். இவ்விதமாய் முற்காலங்களிலேயும் பலஇடங்களிலேயும் நடந்தவைகளை அறியவிரும்புகிறவர்களுக்கு படிப்பு அவசியமாய்வேண்டும்.

படிக்கவேண்டுமெ என்றிருக்கிறவர்கள் ஒழுங்காய் படிக்கவேண்டும். பள்ளிக்கூடத்தில் விளையாடவுஞ் சிரிக்கவுஞ் சண்டைபண்ணவுங்கூடாது. உபாத்தியாருக்கு கீழ்ப்படிந்து அவரில் அன்புகூரவேண்டும். மேலும் படிக்கவேண்டிய பாடங்களை சாக்கிரதையோடே நன்றாய் படிக்கவேண்டும். சிறுபிள்ளைகள் சோம்பலாயிராமல் சாக்கிரதையாய் பள்ளிக்கூடத்திற்கு வந்து படிக்கவேண்டும் என்பதற்கு ஒருகதை சொல்லுகிறேன் கேளுங்கள்.

சிறுபையனொருவன் தகப்பனாலே பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்பட்டான். அவன் புறப்பட்டுப்

போகையில் சோம்பற்குணமுள்ளவனானபடியால் விளையாடப்போகவேண்டுமென்று யோசனைபண்ணி புட்பங்கள்தோறுஞ் சஞ்சரிக்கிற ஒரு தேனீயை கண்டு அழகுள்ள ஈயே என்னோடுகூட விளையாட வருகிறாயாவென்று கேட்டான். அதற்கு ஈயானது அப்படியல்ல நான் சோம்பலாயிருக்கக்கூடாது. நான் போய் தேனைக் கூட்டவேண்டுமென்று சொல்லிப்போயிற்று. பின்பு அவன் ஒருநாயை கண்டு நாயே நீ யென்னோடே விளையாட வருகிறாயாவென்றான். அதற்கு நாயானது அப்படியல்ல நான் சோம்பலாயிருக்கக்கூடாது. என் நாயன் வீட்டை காவல்காக்க போகிறேனென்று சொல்லிப்போயிற்று. அப்புறம் அந்த சிறுபையன் ஒரு வீட்டின் கூரையிலிருந்து வைக்கோலை பிடுங்குகிற ஒரு குருவியை கண்டு குருவியே யென்னோடே விளையாட வருகிறாயா வென்று கேட்டான். அதற்கு குருவியானது அப்படியல்ல நான்சோம்பலாயிருக்கக்கூடாது. எனக்கு கூடு கட்டும்படியாகக் கொஞ்சம் வைக்கோலையும் கொஞ்சம் பஞ்சையுங் கூட்டவேண்டுமென்று சொல்லி யதுவும் போய்விட்டது. அப்போது அந்தச்சிறுபையனானவன் தன்னுள்ளத்திலே இதென்னகாரியம் ஒருவருஞ் சோம்பலாயிருக்கிறதில்லையே அப்படியானால் சிறுபிள்ளைகளுஞ் சோம்பலாயிருக்கக் கூடாதென்று நினைத்து சீக்கிரமாய்ப் பள்ளிக்கூடத்தில் சேர்ந்து பாடங்களை திட்டமாய் படித்தான். உபாத்தியாரும் அவனை நல்லபையனென்று சொன்னார்.

---

கவையாகிக் கொம்பாகிக் காட்டகத்தே நிற்.கு
மவையெல்லா மல்ல மரங்கள் சவை நடு....வே
நீட்டோலை வாசியா நின்றான் குறிப்பறி....ய
மாட்டா தவனே மர.......................ம்

[மூதுரை.]

# ௨. பாடம்.

## பராபரனைக்குறித்துச்சொல்லியது.

கற்றதனா லாய பயனென்கொல் வாலறி ....வ
னற்றாடொழா அரெனி ...............ன்.
[குறள்.]

---

பராபரனுக்கு பயப்படுதல் ஞானத்துக்கு துவக்கமென்று சத்தியவேதத்தில் சொல்லியிருக்கிறபடியினாலே, நன்றாய்ப்படிக்க வேண்டுமென்றிருக்கிறவர்களுக்கு தங்களை படைத்த பராபரனையறிந்து வணங்குகிறதே முக்கிய கவலையாயிருக்க வேண்டும். அப்படியே செய்யவேண்டுமென்று பிரயாசப்படுகிற பிள்ளைகளிடத்திலே பராபரன் பிரியமாயிருக்கிறார்.

பராபரனை குறித்து அறியவேண்டிய இலட்சணங்களில் சிலவற்றை சொல்லுகிறேன். அவர் ஆவியாயிருக்கிறார், ஆகையால் அவருக்கு ரூபமில்லை. அவர் நித்தியமுள்ளவர், ஆகையால் அவருக்கு துவக்கமுமுடிவுமில்லை. அவர் பரிசுத்தராகையால் அவர் பாவத்தைச்செய்யமாட்டார். அவர் நீதிபரராகையால் எல்லாரையும் நியாயம்விசாரிப்பார். அவர் இரக்கமுள்ளவர், ஆகையால் மனிதரிரட்சிப்படையசித்தமுள்ளவராயிருக்கிறார். அந்த இரட்சிப்பு அவருடைய குமாரனாகிய இயேசுக்கிறிஸ்துவினாலே வெளிப்பட்டது. மனிதர் யாவரும் பாவகுணமுள்ளவர்களானபடியினாலே அவர்களுக்கு மன்னிப்பும் பரிசுத்தகுணமும் உண்டாகாவிட்டால் அவர்கள் மோட்சக்கரை சேருகிறது கூடாதபடியால் இயேசுக்கிறிஸ்து பாவ நாசகராக உலகத்தில் தோன்றி சத்தியவேதத்தை விளம்பினார்.

பராபரன் வானத்தையும் அதிலுள்ள சூரியசந்திர நட்சத்திரங்களையும் மேகங்களும் பூமியையும் அதிலுள்ள தண்ணீர்கள் மலைகள் மரங்கள் மிருகங்கள் பறவைகள் பூச்சிகள் மீன்கள் முதலானவைகளையும் பிரதான சிருஷ்டியாகிய மனிதனையும் உண்டாக்கினார். அவர் நம்மை படைத்ததுமல்லாமல் இவ்வுலகத்திலே நமக்கு கிடைக்கிற நன்மைகள் எல்லாவற்றையும் அவரே கொடுத்து காப்பாற்றி வருகிறார். நம்மை உயிரோடே காக்கிறதும் அவர்தான். நமக்கு சித்தமான வேளையிலே சாகப்பண்ணுகிறதும் அவர் தான் அவரால் செய்யக்கூடாத காரியமொன்றுமில்லை. நாம் என்ன செய்தாலும் எங்கே போனாலும் இரவும் பகலும் நம்மிடத்தில் கண்ணோக்கமாயிருக்கிறார். நாம் என்னத்தை நினைத்தாலும் என்னத்தை விரும்பினாலும் என்னத்தை சொன்னாலும் என்னத்தை நடப்பித்தாலும் அவையெல்லாம் அவருக்கு திட்டமாய் தெரியும். ஆகையால் நாம் பராபரனிடத்தில் பத்தியாயிருக்கவும் அன்புகூரவும் அவருக்கு கீழ்ப்படியவும் அவருக்கு பிரியமாய் நடக்கவும் வேண்டும். நல்லவர்கள் எல்லா காரியங்களை பார்க்கிலும் பராபரனிடத்தில் அதிக விருப்பமாயிருப்பார்கள். காலையில் எழுந்திருக்கிறபொழுதும் இராத்திரியில் படுத்துக்கொள்ளுகிறபொழுதுந் தங்களுக்கு மிகுந்த உபகாரங்களை கொடுத்துவருகிற அவரை குறித்து முக்கியமாய் சந்தோஷத்தோடே நினைவுகூர்ந்து செபம்பண்ணுவார்கள். பகல்தோறும் அவரை குறித்து தியானம்பண்ணவும் அவரை குறித்து மற்றவர்களிடத்தில் பேசவும் அவரை குறித்து வாசிக்கவும் அல்லது கேட்கவும் விருப்பமாயிருப்பார்கள்.

# ரு. பாடம்.

## ஆத்துமத்தை குறித்துச் சொல்லியது.

பராபரன் மனிதராகிய நமக்கு ஆத்துமாவை கொடுத்திருக்கிறதினாலேயே நம்மை மிருகங்களுக்கு மேன்மையுள்ளவர்களாக செய்தார். ஆத்துமாவினாலே தான் நாம் பராபரனை நல்லவனென்றும் ஞானமுள்ளவனென்றும் வல்லமையுள்ளவனென்றும் அறிந்துகொள்ளுகிறோம். மற்றும் அநேக ஞான காரியங்களையுங் கிரகித்துக்கொள்ளுகிறோம். மிருகங்களோ இவைகளை யறியமாட்டாதவைகள். அவைகளுக்கு சொல்லிக்கொடுத்தாலும் தெரியவரமாட்டாது. மிருகங்கள் சாகிறதுபோல நம்முடைய தேகங்களுஞ் சாகும். அப்போது அந்த தேகங்களை பிரேதக்குழியில் அடக்கம்பண்ணுவார்கள். கொஞ்சக்காலத்துக்குள்ளாக அவை மண்ணாய்ப் போம். ஆத்துமாவோ அழிவில்லாததானபடியால் அது சாகமாட்டாது.

பராபரன் கற்பிக்கிறபடியே நடக்க பிரயாசப்படுகிறவர்கள் மனதிலே சந்தோஷம் அடைவார்கள். அப்படி நடவாதவர்கள் பேரில் பராபரன் கோபமாகி அவர்களை தண்டிப்பார். கிறிஸ்து இரட்சகரை நம்பி நன்மை செய்கிறவர்கள் சாகுங்காலத்தில் அவர்களுடைய தேகம் அழிந்துபோனாலும் அவர்களுடைய ஆததுமா சரீரத்தோடே அழியாமல் பராபரனிடத்தில் சேர்ந்து பாவத்தையும் வருத்தத்தையுங் குறைவையுந் துக்கத்தையும் அடையாமல் நித்திய சந்தோஷத்திலே வாழும். மெய்ப்பத்தியில்லாதவர்கள் சாகிறபொழுது அவர்களுடைய ஆத்துமாக்களுக்கு பராபரன் சொல்லமுடியாத வேதனைகளை உண்டாக்குவார். ஆகையால்

ஆத்தும ஈடேற்றத்தை குறித்து முக்கியமாய் கவலைப்படவேண்டும். கிறிஸ்து நாதராலுண்டான இரட்சிப்பை அனுபவிக்கும்படியாயும் பரிசுத்த ஆவியின் அருளால் துர்ச்சுபாவம் நீங்கி நற்சுபாவமுண்டாகும்படியாயுங் கருத்துள்ளவர்களாக செபம்பண்ணவேண்டும்.

---

## ச. பாடம்.

### பெற்றோர்க்கு பிள்ளைகள் செலுத்த வேண்டிய கடமைகள்.

பிள்ளைகளே உங்கள் தாய் தகப்பன்மார்களிடத்தில் அன்புகூரக்கடவீர்கள். நீங்கள் பிறந்த நாள்முதல் அவர்கள் உங்கள்மேல் பட்சமாயிருந்து அன்போடே ஆதரித்து வந்தார்களே நீங்கள் சிறுகுழந்தைகளாய்! கிடந்து பேசவும் நடக்கவுந் திராணியில்லாமல் அழுதுகொண்டு தொந்தரவுபண்ணி வந்த காலத்திலும் அவர்கள் உங்களை நேசித்து வெகு கவலையோடே வளர்த்து வந்தார்ள். பின்னும் உங்கள் தாய்தகப்பன்மார் போலயார் உங்களுக்கு தயவாயிருப்பார்கள். உங்களுக்கு நன்மை வரும்படி அவர்களை போல யார் கவலைப்படுவார்கள். நீங்கள் சுகமாயிருந்து சந்தோஷிப்படுகிறதை காண அவர்களை போல யார் விருப்பமாயிருப்பார்கள்? நீங்கள் வியாதிப்பட்டு வலியும் நோவு முள்ளவர்களாகும் பொழுது உங்கள் பேரில் ஆவலாயிருந்து மடியிலே வைத்துக்கொண்டு ஆறுதல் செய்வார்கள். அதிக வியாதிப்பட்டால் இராமாறு கண்ணுறங்காமல் கிட்டவே யிருந்துகொண்டு வேண்டியதை செய்வார்கள். மற்றென்ன வேலையிருந்தாலும் பின்னும் எங்கே போனாலும் உங்களை குறித்தே மனதில் வா

ஞ்சையோடுஞ் சிந்தனைபண்ணுவார்கள். மற்றவர்கள் உங்களை குறித்து இப்படி கவலைப்படமாட்டார்களே. ஆகையால் பெற்றோரிடத்தில் அன்புகூரவேண்டுவதில்லையா? அவர்கள் உங்களுக்காக இவ்வளவு பிரயாசப்பட்டிருக்கிறார்களென்று எண்ணி அவர்களுக்கு வியாதியுந் துன்பமும் வருகிறபொழுது அவர்களுக்கு ஆறுதல் செய்யவும் அவர்கள் விருத்தாப்பியமும் எளியவர்களுமானால் நீங்கள் நன்றாய் வேலைசெய்து அவர்களுக்கு ஒத்தாசையாயிருக்கவுஞ் சாக்கிரதையுள்ளவர்களாய் இருக்கவும் வேண்டும். மேலும் உங்களை பார்க்கிலும் அவர்களுக்கு அதிக புத்தியுண்டானதினாலுந் தேவநியம படி உங்கள் பேரில் அதிகாரமுடையவர்களானதினாலும் அவர்கள் சொற்படி எப்போதுங் கீழ்ப்படிந்தே நடக்கக்கடவீர்கள்.

---

வயாவும் வருத்தமு மீன்றக்கா ணோவு.......ங்
கவா அன மகற்கண்டு தாய்மறந்தாஅ......ங்
கசாஅத் தானுற்ற வருத்த முசாஅத்த.....ன்
கேளிளைக் காணக் கெடு................ம்

[நாலடியார் சுற்றந்தழால்.]

---

## ௫. பாடம்.

### தகப்பனானவன் தன்மகனுக்கு சொல்லுகிற புத்தி.

---

மற்றறிவா நல்வினை யாமிளைய மென்னா.........து
கைத்துண்டாம் போழ்தே கரவா தறஞ் செய்ம்மி.ன்
முற்றி யிருந்த கனி யொழியத் தீவளி..........யா
னற்கா யுதிர்தலு முண்..........................டு.

[நாலடி. இளமை நிலையாமை.]

எனக்கு நேசமான பிள்ளையே நீ யெல்லாவற்றிலும் முக்கியமாய் மெய்த்தேவனை யறிந்து தொழுதுகொள். அவருடைய தயையை குறித்து தியானி. அவருடைய நாமத்தை குறித்து மரியாதை

யாய் பேசு. அவருடைய மகிமையை புகழ். அவரை ஆராதிக்க நேரிடும் எந்த சமையத்தையும் விட்டுவிடாதே. நாள்தோறும் அவரை நோக்கி செபம்பண்ணிக்கொண்டு வருவாயாக. உன்னை போலவே மற்றெல்லா மனிதரையும் நீ சிநேகிக்க வேண்டும். பராபரன் எல்லாரிடத்திலும் அன்பாயுந் தயையாயும் இரக்கமாயும் இருக்கிறாரென்று அறிந்து நீயும் அந்தப்படியே எல்லாரிடத்திலும் அன்புள்ளவனாயிருக்கும்படி பிரயாசப்படக்கடவாய்.

சத்தியம் உண்மை இவையே உன் பேச்சுக்கு அலங்காரமாயிருப்பதாக. அந்தந்த காரியங்களின் குறைகுணங்களை பகுத்தறியாமலிருக்கில் அவைகளின்மேல் மனதை வைக்கவேண்டாம். நீ சுத்தமும் வெறியின்மையுங் கற்புமுள்ளவனாய் நட. நீயுண்கிறதுங் குடிக்கிறதும் மட்டாயிருப்பதாக. உன் தேகத்தை ஆத்துமாவுக்கு ஊழியக்காரன் போலே நினைத்து அது தன் ஊழியத்தைதிட்டமாய் நிறைவேற்றும்படிக்கு வேண்டியபடி மாத்திரம் அதை போஷிக்கக்கடவாய். நாளுக்கு நாள் நீ சாந்த குணமுள்ளவனாயிரு. உன்னை சூழ்ந்திருக்கிறவர்களுடைய குறைவை நீக்கவும் அவர்களுடைய சுகத்தை குறித்து சந்தோஷப்படவும் பிரயாசப்படு. அவர்கள் உனக்கு செய்யும் அன்பில்லா கிரியைகளை நீ யெண்ணாமலும் அவர்கள் விரோதித்துசெய்யுந் தீமைகளுக்காக நீபதில் தீமைசெய்யாமலும் பொறுத்துக்கொள்.

என் மகனே இந்த விதிகளை நிறைவேற்றும்படிக்கு இருக்கிற காலஞ் சுருக்கந் தான். ஆகையால் வருகிற வருஷத்தில் இப்படி செய்வேன் என்றாவது பெரிய மனிதனுன பிற்பாடு செய்வேன் என்றாவது நீ சொல்லி மோசம்போகாதே. என் தகப்பன்

எனக்கு இந்த விதிகளை சொல்லக்கேட்டது நேற்று கேட்டது போலிருக்கிறது. நீ சாகிறவேளை தெரியாதபடியால் கவலையோடே பார்த்து நட.

நின்றன நின்றன நில்லா வெனவுணர்.........ந்
தொன்றின வொன்றின வல்லே செயிற் செய்.க
சென்றன சென்றன வாழ்நாள் செறுத்துட..ன்
வந்தது வந்தது கூற்.......................று
[நாலடியார்.]

## ௩. பாடம்.

### சகோதரர்களுக்குஞ் சகோதரிகளுக்கும் நடக்க வேண்டிய ஒழுக்கம்.

பிள்ளைகளே உங்களுக்கு சகோதரருஞ் சகோதரிகளும் உண்டானால் அவர்களிடத்தில் அன்புகூரக்கடவீர்கள். ஒரே தாயின் பிள்ளைகள் ஒருவர்மேல் ஒருவர் மூர்க்கங் கொள்ளுகிறதும் வாக்குவாதஞ் செய்கிறதும் அடிக்கிறதும் இலட்சணமல்ல. ஆகையால் அவர்களோடே சண்டைபண்ண வேண்டாம். அவர்களை கோபம் மூட்டவும் ஏசவும் வேண்டாம். ஒருவர் மேல் ஒருவர் பட்சமாயிருந்து பொறுமைக்கும் இடங் கொடாமல் நன்மையே செய்யக்கடவீர்கள். இப்படியே நடந்து வருவீர்களானால் உங்களுக்கு வெகு பிரயோசனம் உண்டாகும். உங்களுக்கு பகைஞரானவர்கள் இலேசாயுங்களை கெடுக்கவுமாட்டார்கள். எப்படியெனில் ஒரு கிழவனுக்கு உண்டான குமாரர்கள் அடிக்கடி சண்டைபிடித்து வருவார்கள். கிழவன் அதை கண்டு அவர்களை யிணங்கப்பண்ண வெகுவாக தண்டித்தும் இணங்கிக்கொள்ள அவர்களுக்கு கொஞ்சமும் மனமில்லை. கடைசியாக அவன் யோசனை பண்ணி தன்

குமாரரை யொருமிக்க வரவழைத்து ஒரு முப்புரிக்கயிற்றை அவர்களிடத்தில் கொடுத்து உங்களில் பலவான் இதை யறுத்துப்போடுங்களென்றான். எல்லாரும் வேண்டிய பிரயாசப்பட்டும் ஒருவராலும் அறுக்கக்கூடாமையால் கிழவன் அதை பிரித்து ஒவ்வொரு புரியாக ஒவ்வொருவர் கையில்கொடுத்தான். உடனே அதை லெகுவாக அறுத்துப்போட்டார்கள். அப்பொழுது கிழவன் சொன்னது என் குமாரரே ஒருமித்திருக்கிறது எவ்வளவு பெலமென்று பாருங்கள். நீங்கள் ஒருமித்திருந்தால் உங்களையாரும் மோசப்படுத்தமாட்டார்கள். பிரிவினைக்கு இடங் கொடுத்தீர்களானால் சத்துருக்கள் உங்களை லெகுவாய் மோசப்படுத்துவார்களே என்றான்.

அழன்மண்டு போழ்தி னடைந்தவர்கட் கெல்........லா
நிழன் மரம்போ னேரொப்பத் தாங்கிப் பழுமரம் போ.ந்.
பல்லார் பயன்றுய்ப்பத் தான்வருந்தி வாழ்வ........தே
நல்லான் மகற்குக் கட..........................ன்
[நாலடியார்.]

## ௭. பாடம்.

### மற்ற பிள்ளைகளோடே நடக்கவேண்டிய ஒழுக்கம்.

பிள்ளைகளே, பொல்லாதவர்களோடே ஐக்கியப்பட வேண்டாம். ஐக்கியப்பட்டால் அவர்கள் துர்நடக்கையை பார்த்து நீங்களும் பொல்லாதவர்களாவீர்கள். உங்களோடே விளையாடவும் உங்களுக்கு தோழராயிருக்கவும் நன்னடக்கையுள்ளவர்களை பார்த்து தெரிந்துகொள்ளுங்கள். மற்ற பிள்ளைகளோடே விளையாடுகிற நேரத்தில் அவர்களை அடிக்கவும் ஏசவும் தூஷணமான வார்த்தைகளை சொல்லவும் வேண்டாம். விளையாடுகிற பொழுது கோபங்கொள்ளவும் பொய் சொல்லவும் வஞ்சனை

பண்ணவும்வேண்டாம். கூன் குருடு சப்பாணி
முதலான அங்கவீனரை கண்டால் அவர்களை பார்
த்து சிரிக்கவும் பரியாசம் பண்ணவும்வேண்டாம்.
உனக்கு உடைமையாயிராத பணங்கள் பழங்கள்
முதலானவைகளை திருடவுந் திருடுகிற பிள்ளைக
ளோடே கலந்திருக்கவும் வேண்டாம். தகப்பனு
டைய உத்தரவு இல்லாமல் ஊரைவிட்டு மற்ற இட
ங்களுக்கு போகவுந் திரியவும் வேண்டாம்.

---

*அறிமி னறநெறி யஞ்சுமின் கூற்ற...............ம்*
*பொறுமின் பிறர்கடுஞ்சொற் போற்றுமின் வஞ்ச...ம்*
*வெறுமின் வினைதீயார் கேண்மை யெஞ்ஞான்று...ம்*
*பெறுமின் பெரியார் வாய்ச் சொ...............ல்*

[நாலடியார்.]

---

# ௮. பாடம்.

## பள்ளிக்கூடத்தில் நடக்கவேண்டிய ஒழுங்கு.

---

*கற்க கசடறக் கற்பவை கற்ற...............பி*
*னிற்க வதற்குத் த.........................க*

[குறள்.]

பள்ளிக்கூடந் தொடங்குகிற நேரத்தை அறி
ந்து சுத்தமுள்ளவர்களாய் வரவேண்டும். இதற்
காக சூரிய உதையத்திற்கு முன்னமேதானே எழு
ந்து உங்களை காப்பாற்றின மெய்த்தேவனை தொ
ழுது தந்தசுத்தி முதலானது செய்துகொண்டு கை
யிலே சுவடி புத்தகங்களை எடுத்துக்கொண்டு சரி
யான நேரத்திற் பள்ளிக்கூடத்திற் சேரவேண்டும்.
அவ்விடத்தில் முதலாவது உபாத்தியாரை வந்தன
ஞ்செய்து குறிக்கப்பட்ட இடத்தில் நேராய்ப்போ
யிருந்து அவர்சொற்படியே பாடங்களை படிக்க
வேண்டும். மற்றவர்களோடே பேசவும் விளையாட

வுஞ் சிரிக்கவுங்கூடாது. அதிக சத்தமிட்டு படிக்க வுங்கூடாது நிற்கிறபொழுது ஒருவர்மேலொருவர் கைபோடாமலுஞ் சுவரின்மேற் சாராமலும் வரிசையாய் நின்று யிருகையிலும் புத்தகத்தை பிடித்துக்கொண்டாவது கைகளை கட்டிக்கொண்டாவது பாடத்தை ஒப்புவிக்கவேண்டும். உபாத்தியார்வினவுகிறபொழுதும் யாதொன்றை விஸ்தரித்துசொல்லுகிற பொழுதும் பராமுகமாயிராமல் அவர்முகமே நோக்கமாக கவனிக்கவேண்டும். படிக்கவேண்டியவேளையில் எவ்வளவாகிலுஞ் சோம்பலாயிருக்கக்கூடாது. இன்றைக்கு படிக்கவேண்டியதை நாளைக்கு படிப்பேனென்றுசொல்லி கடத்திப்போடவேண்டாம். பிற்பாடு சாப்பிடும்படிக்கு போகும்பொழுது மற்ற இடங்களுக்குபோய் விளையாடாமல் நேராய் வீட்டிற்சென்று தாயார் இடுகிறதை சந்தோஷத்தோடே சாப்பிட்டு திரும்ப சரியான நேரத்திற் படிக்கபோகவேண்டும். கையிற்கொடுத்திருக்கிற சுவடி புத்தகங்களை அழுக்கு படுத்தாமலுங் கிழியாமலும் போக்கடியாமலும் பத்திரமாய் வைத்துக்கொள்ளவேண்டும். முன் படித்தவைகளை மறவாதபடிக்கு பழைய பாடங்களையும் அடிக்கடி வாசிக்கவேண்டும். தெரிந்தவைகளை தெரியாதவர்களுக்கு சொல்லிக்கொடுங்கள். இப்படி சொல்லிக்கொடுக்கிறதினாலேகுறைவுவரமாட்டாதே. ஊற்றுள்ள கிணற்றிலிருந்து தண்ணீர் எவ்வளவு எடுத்தாலுங் குறையாதே. மேலும் ஒருநாள் சாக்கிரதையாயும் மற்றொருநாள் சோம்பலாயும் இராமல் எப்பொழுதும் உன்திராணிக்கேற்றபடி கல்வியில் முயற்சிசெய். சோர்வடையாமல் நாடோறுங் கிரமமாய் கொஞ்சமாகிலும் நன்றாய்ப்படிக்கிறவன் எப்படியும் அறிவுள்ளவனாவான். தான் அதிகெட்டிக்காரனென்று நினைத்து ஒருவேளாவேளை மாத்

திரம் படிக்கிறவன் அதிகமாய் தேறமாட்டான். எதுபோலெனில் ஒரு ஆமையும் முயலும் இன்ன இடத்துக்கு யார் சீக்கிரமாய் போய் திரும்புகிறது பார்ப்போமென்று பந்தையம் போட்டு ஓடின முயலானது துவக்கத்தில் அதிக வேகமாய் ஓடி ஆமை வெகு தூரத்திலே பின் வருவதை கண்டு இப்போது கொஞ்சம் நித்திரைபண்ணி இளைப்பாறலாமென்றும் ஆமை கிட்ட வந்தவுடனே எழுந்து ஓடலாமென்றும் எண்ணி வழிபக்கத்தில் ஒரு செடி மறைவிற் படுத்துக்கொண்டு நித்திரை பண்ணிற்று. ஆமை ஒரே நடையாய் மெள்ள மெள்ளபோய் குறித்த இடத்தை சேர்ந்து திருப்பி முயல் நித்திரை தெளிந்து ஓடி வருவதற்குள்ளாக புறப்பட்ட இடத்தை வந்து சேர்ந்து பந்தையத்தை கெலித்தது.

---

குஞ்சி யழகுங் கொடுந்தானைக் கோட்டழ......கு
மஞ்ச ளழகு மழகல்ல நெஞ்சத்...............து
நல்லமையா மென்னு நடுவு நிலைமையா ........ற்
கல்வி யழகே யழ..............................கு
[நாலடியார்.]

---

## ௪. பாடம்.

### பொய்யைத் தவிர்த்தல்.

---

தன்னெஞ்சறிவது பொய்யறப் பொய்த்தபி......ன்
றன்னெஞ்சே தன்னைச் சுடு....................ம்.
[குறள்.]

பொய் சொல்லல் மிகவும் இழிவுள்ள காரியம். பொய்சொல்லத் துணிகிறவன் அநியாயம் களவு இவைமுதலிய தோஷங்களுக்கும் அஞ்சமாட்டான். மேலும் அப்படிப்பட்டவன் நிசத்தைச் சொல்லுகிறபொழுதும் ஒப்புக்கொள்ளப்பட மாட்டான்.

அற்ப பிரயோசனத்துக்காக உள்ளதை மறைக்கிறவனும் இல்லாததை சொல்லுகிறவனும் தன்சொந்த நன்மையை கெடுக்கிறான். சத்தியத்தை பேசுகிறவனுக்கு தன் காரியத்தில் நஷ்டம் வந்தாலும் அவனுள்ளத்திற் சந்தோஷம் உண்டாகும். மற்றவர்களும் அவனை நம்பி மரியாதை செய்வார்கள். ஆகையாற் பிள்ளைகளே, மற்றவர்களாலே யோக்கியர்களென்று உலகத்திலே உங்களுக்கு காரியஞ் சித்திக்கவும் மரியாதை அடையவும்வேண்டுமானாற் சத்தியமே செயமென்று எப்பொழுதும் நினைவுள்ளவர்களாய் நடந்து கொள்ளுங்கள். இடைப்பையன் ஒருவன் ஆடுகளை மேய்த்துக்கொண்டு வருங் காலத்தில் விளையாட்டாக ஓகோ ஓநாய் வருகிறது ஓநாய் வருகிறது என்று சத்தம்போட்டான். உடனே ஊராரெல்லாரும் வெளியே ஓடிவர இவன் அவர்களை பார்த்துச்சிரித்தான். இப்படி இரண்டொருதரம் செய்துவந்தான். பிற்பாடு ஒருநாள் மெய்யாய் ஓநாய்வந்தது. இவன் அப்படியே சத்தம்போட ஊரார் அவன் பரியாசம்பண்ணுகிறானென்று நினைத்து ஒருவரும் ஒத்தாசைபண்ண வாராததினாலே ஓநாய் அவனையும் ஆடுகளிற் சிலவற்றையுங் கடித்துப்போட்டது. இவ்விதமாய் பொய்க்காரர் நிசத்தை சொல்லுகிறபொழுதும் நம்பப்படமாட்டார்கள்.

---

வஞ்சித் தொழுகு மதியிலிகாள் யாவரையு.........ம்
வஞ்சித்தோ மென்று மகிழன்மின் வஞ்சித்......த
வெங்கு முளனொருவன் காணுங்கொ லென்றஞ்....சி
யங்கங் குலைவ தறி.............................வு

[நீதிநெறிவிளக்கம்.]

# ய. பாடம்.

## செய்ந்நன்றி யறிதல்.

ஒருவராற் பெற்ற உபகாரத்தை ஒருபோதும் மறக்கக்கூடாது. ஒருவரால்வந்த தீமையை அப்பொழுதே மறக்கிறது குணம். நன்றி மறக்கிறவனே தன்னுள்ளத்தில் சமாதானம் அடையமாட்டான். மற்றவர்களும் அவனை ஒப்புக்கொள்ளமாட்டார்கள். நன்மை செய்தவர்களும் அப்படிப்பட்டவனுக்கு மறுபடியும் நன்மை செய்யமாட்டார்கள். செய்தநன்றி மறப்பதும் அல்லாமல் நன்றி செய்தவர்களை கெடுக்கவும் நினைக்கிற துஷ்டர் ஒருக்காலுஞ் சுகம் அடையமாட்டார்கள். இதற்கு திருட்டாந்தமாக ஒருகதை சொல்லுகிறேன். பெருந்தீப்பற்றின ஒருபுதரிலே கிடந்த பாம்பு தன் உயிருக்காக பயந்து தப்பிக்கொள்ள எத்தனப்பட்டது. அந்தப்புதர் தீயினால் முழுதுஞ் சூழப்பட்டிருந்தபடியால் அதற்கு சமயம் வாய்க்கவில்லை.

அத்தருணத்தில் பிரயாணம் போகிற ஒரு வர்த்தகன் தனக்கு நேராக வரக்கண்டு அவனை அழைத்து ஓ சிநேகிதனே என் பிராணனை காப்பாற்றுவாயென்றது. அதற்கு அவன் நீ விஷமுள்ள செந்து உனக்கு சகாயஞ் செய்தால் பின்பு நீ தீங்கு செய்வாயென்று அஞ்சுகிறேன் என்றான். அதற்கு அந்த பாம்பு பயப்படாதே நீ என் பிராணனை காப்பாற்றினால் நான் உன் பிராணனை வாங்குவேனென்று நீ நினைக்கிறது சரியல்ல என்றுசொல்ல வர்த்தகன் உபகாரஞ்செய்வதினால் ஒருவனுங் கெட்டுபோகமாட்டான். எப்படியும் அவனை கடவுள் காப்பாற்றுவார் என்று யோசித்து தன்பையின் இரு

பக்கத்திலும் ஒரு கயிறுகட்டி அதை ஒரு தடியின் நுனியிலே பூட்டி புதருக்குள் நீட்டினான். அந்த பாம்பு பைக்குட் புகுந்த உடனே அதையெடுத்து வெளியேவிட்டான். கொடுமையுந் தந்திரமுமுள்ள அந்த பாம்பு இவ்விதமாக விடுதலையான பின்பு சமயம் வாய்த்ததை கண்டு தன் உபகாரியாகிய அந்த வர்த்தகனை கடிக்கப்போயிற்று. அதைகுறித்து அவன் நீ ஏன் இப்படி அநீதஞ் செய்யவருகிறாயென்றான். பாம்பானது நீ எனக்கு உதவிசெய்திருந்தாலும் நான் உன்னைக்கொல்வதற்கு அது தடையல்ல எங்கள் உபகாரிகளை கொல்லுதல் எங்கள் வழக்கம் எங்கள் சுபாவம் மனிதனை கொல்லுதல் மனிதன் எங்களுக்கும் மற்றும் எல்லாமிருகங்களுக்குஞ் சத்துருவாயிருக்கிறான். இதைகுறித்து நீ சந்தேகிப்பாயாகில் உனக்கு இஷ்டமான விதமாக விசாரணை செய்துகொள்ளென்றது. அத்தருணத்தில் தங்களுக்குமுன்னே காட்டில் மேய்ந்து கொண்டிருந்த ஒரு ஆட்டை கண்டு அவனும் பாம்பும் அதனிடத்திற்குப்போய் அதனோடு இந்த வர்த்தமானங்களை சொல்லும் முன்னதாக அந்த பாம்பு இந்த மனிதன் எனக்கு உபகாரி இவனை நான் கொல்லலாமோ கொல்லலாகாதோ என்று கேட்டது. அந்த ஆடானது இச்சணமே கொல்ல எவ்வளவும் யோசனைபண்ணாதே மனிதருடைய நடக்கையை நான் நன்றாய் அறிந்திருக்கிறேன். அதை குறித்து உனக்கு கொஞ்சஞ் சொல்லுகிறேன். என் மயிரினால் நெய்யப்பட்ட கம்பளத்தை தரித்தும் அதின்மேல் உட்கார்ந்தும் இருக்கிறார்கள். அப்படி இருந்தும் நன்றியறிதல் இல்லாதவர்களாய் என் குட்டியை கொன்று என் மனதை கிலேசப்படுத்துகிறார்கள் இதினிமித்தம் நான் மிகவும் வருந்துவதுமல்லாமல் என்னையும் ஒருநாள் கொ

ல்வார்கள் என்று பயப்படுகிறேன். ஆதலால் இப்படிப்பட்ட சாதியைக்கொல்வதினால் குற்றம் ஒன்றும் இல்லையென்று உத்தாரஞ் சொல்லிற்று.

ஆயினும் அந்த வர்த்தகன் ஒருவருடைய சாட்சி போதாது இரண்டு மூன்று பேர் இப்படி சொல்லுவார்களானால் நான் மரணத்துக்குட்படுவேனென்றான்.

பின்பு அவர்கள் ஒரு கிழப்பசுவைக்கண்டு அதனிடத்திலே இந்த விபரங்களை சொல்ல அது மனிதனுடைய நடக்கையை நான்சொல்லட்டுமா? கேள்; வருஷந்தோறும் அவனுக்கு ஒவ்வொருகன்று ஈன்றுகொடுக்கிறேன் வெளிபுல்லை தின்றும் நாள்தோறும் அவனுக்கு பால்கொடுக்கிறேன் அவன் அதைகொண்டு தயிர் மோர் வெண்ணெய் முதலான அநேகவித உருசியான உணவை செய்துகொள்ளுகிறான் இப்படி அவனுக்கு அநேகவருஷங்கள் உபகாரஞ் செய்துகொண்டுவந்தும் இப்போது நான் கிழமானதை கண்டு என்னை கடைக்காரனுக்கு விற்றுப்போட்டான். அவன் என்னை நாளைக்கு கொல்வான் இப்படி மனிதன் துஷ்டனாய் இருக்கிறபடியால் இவனை இப்போதே கொல்லென்றது.

வர்த்தகன் இந்த வார்த்தைகளை கேட்டு தன் பிராணனுக்கு பயந்து அழுதான். அப்போது அந்த வழியாய்வந்த நரி அவனோடு சிநேகிதனே நீ ஏன் விசனமும் பயமும் உடையவனாய் இருக்கிறாயென்று கேட்க, வர்த்தகன் உத்தாரஞ் சொல்லாமையினால் அந்த பாம்பு இவன் சரித்திரத்தைக்கேள் இந்த மனிதன் உண்மையாகவே ஒரு பெருந்தீயில் இருந்து என்னை நீக்கி இரட்சித்தான். ஆயினும் எங்கள் உபகாரியை கெடுப்பது எங்களுக்கு வழக்கமானபடியால் இப்போது இவனை கடி

க்கப்போகிறேன். ஆடும் பசுவும் இந்தப்பிரகார மே அவனுக்கு விரோதமாக தீர்த்தன என்றது. நரி நான் இதற்கு மிகவும் ஆச்சரியப்படுகிறேன் அவன் உன்னை தீயில் இருந்து எப்படி இரட்சி ப்பான்? அதை சொலலும்படியாக பிரார்த்திக்கி றேன் என்றது. பாம்பு இவன் தன் பையை ஒரு கொம்பின் நுனியிலேகட்டி புதருக்குள் விட்டான். நான் அதற்குள்ளே நுழைந்துகொண்ட பின்பு என்னை வெளியில் எடுத்துவிட்டான். அந்த பை தான் அவன் தோளின்மேல் கிடக்கின்றது பார் என்றது. நரியானது உன்னுடைய பெரிய உடல் இவ்வளவு சிறு பைக்குள் நுழைந்திராது. அதைப் பார்த்தாலொழிய நான் நம்பமாட்டேன் என்ற து. அதனால் அந்த பாம்பு வர்த்தகனிடத்தில் அந்த பையை வாங்கி மறுபடியும் அதற்குள்ளே நுழை ந்தது. அப்போது அந்த நரி அந்த பையின் வா யை மிகவும் பத்திரமாய் இழுத்துக்கட்டும்படி அ ந்த வர்த்தகனுக்கு கண்ணினால் சமிக்கைபண்ண அவன் அந்தப்படி செய்தவுடனே அவனுடைய தடியினால் அதின் தலையை நசுக்கும்படி சொல்லி ற்று இவ்விதமாக வர்த்தகன் அந்த நரியினுடைய உபாயத்தினாலே பாம்பைக்கொன்று தன் உயிரை க்காப்பாற்றிக்கொண்டான். இதுபோல தன் உப காரியை கெடுக்கிறவனும் நன்றி அறியாதவனுஞ் சுகம் அடையமாட்டான்.

---

நன்றி மறப்பது நன்றன்று நன்றல்......ல
நன்றே மறப்பது நன்.................று

[குறள்.]

# ௰க. பாடம்.

## மனரம்மியத்தைக் குறித்துச் சொல்லியது.

அவாவில்லார்க் கில்லாகுந் துன்பமஃதுண்டே....ற்
றவா அது மேன்மேல் வரு....................ம்

[குறள்.]

செம்பு ஈயம் இரும்பு இவைமுதலான வைகளை இரசவாதத்தினலே பொன் ஆக்கலாமென்று அநேகர் சொல்லிக்கொள்கிறது நிசமான காரியம் அல்ல அப்பேர்ப்பட்ட விசேஷித்த பொருள் உலகத்தில் இல்லாதிருந்தும் அது காட்டும் வல்லமை போல உள்ளது மனிதரிடத்தில் ஒருகுணம் உண்டு. அது மனரம்மியமே; இந்த குணமுடையவர்கள் உலக செல்வங்களை சம்பாதியாவிட்டாலும் அந்த செல்வங்களை விரும்பாமல் இருப்பதினலே அதை மிகவும் முக்கிய குணமென்று சொல்லவேண்டும். அந்த குணம் மனிதருக்கு நேரிடுந் தரித்திரம் முதலானவைகளை நீக்காதிருந்தாலும் அவைகளை பொறுமையோடே சகிக்கும்படி செய்கின்றதே. ஒருவன் பாக்கியவானென்று அறியவேண்டும் ஆனல் அவனுக்கு உண்டாயிருக்கிற ஆஸ்தியுஞ் செலவும் பார்த்து மதியாமல் அவனுடைய ஆசைகளை அறிந்து மதிக்கவேண்டும். அதிகசெல்வம் உண்டாயிருக்க பின்னும் போதாதென்ற பேராசையினலே கவலைபட்டு அலைகிறவன் பாக்கியவானகமாட்டான். பேராசையை அடக்கி பராபரன் கொடுத்திருக்கிறதே போதுமென்ற மனரம்மியம் உடையவனயிருந்து சாக்கிரதையாய் வேலைசெய்து வருகிறவனே பாக்கியவான். மனரம்மியம் இல்லாதவர்கள் அநேக துக்கங்களுக்கு இடங்கொடுக்கிறார்

கள். அவர்கள் பேராசை கொள்வதினாலே தாங்கள் விரும்புவதை அடையாமல் போவதுமன்றி பொன் முட்டை இட்ட கோழியையுடைய பையனைபோல உள்ளதும் இழந்துபோவார்கள். எப்படியெனில் சிறு பையன் ஒருவனுக்கு பொன் முட்டை இடுகிற ஒரு கோழி உண்டாயிருந்தது. அவன் அநேகநாளாய் அது கொடுக்கும் பொன் முட்டைகளை யெடுத்து செலவு பண்ணிவந்தான். பிற்பாடு அவன் நினைத்தது நான் நாளுக்கு நாள் கொஞ்சம் பொன்னுக்காக காத்திருக்கவேண்டுவ தென்ன நான் இதைக்கொன்று இதன் வயிற்றை கீறினால் உடனே வேண்டிய பொன் அகப்படும் என்று அதைப்பிடித்து வயிற்றை கீறிப்பார்க்குமளவில் அதிலே கொஞ்சமாவது பொன் காணாமல் வாயில் அடித்து அழுதான். ஆகையால் பிள்ளைகளே நீங்கள் பொருளாசைக்கு இடங்கொடாமலும் மற்றவர்களுடைய செல்வத்தை விரும்பாமலும் பராபரன் உங்களுக்கு கட்டளையிட சித்தமாயிருக்கும் நிலைமையிலே செய்ய வேண்டியவைகளை நிறைவேற்றுகிறதே உங்களுக்கு முக்கிய கவலையாயிருக்கக்கடவது.

---

## யஉ. பாடம்.

### விக்கிரகஆராதனையை தவிர்த்தல்.

இரண்டாயிரம் வருஷத்துக்கு முன் நேபுகாத் நேசார் என்ற பெரிய இராசா அநேக தேசங்களைப்பிடித்துக்கொண்டு பாபேலென்ற பட்டணத்தை மகா சிறப்பாய் கட்டுவித்து அதிலிருந்து இராச்சிய பரிபாலனம் பண்ணிவந்தான். இப்படி வருங்காலத்தில் அவன் அறுபது முழ உயரமும்

ஆறுமுழ அகலமுமான பொற்சிலையைப்பண்ணுவித்து ஒரு விஸ்தார மைதானத்திலே அதை நிறுத்தி அதன் பிரதிஷ்டைக்கு வரவேண்டுமென்று தன் இராச்சியத்திலுள்ள பிரபுக்கள் சுபையதார் நியாயாதிபதிகள் பொக்கிஷக்காரர் சாஸ்திரிகள் மணியகாரர் இவர்கள் முதலான யாவருக்கும் உத்தரவு அனுப்பினான். அவர்கள் எல்லாருங் கூடிவந்து நிற்கப் பறையடிக்கிறவன் உரத்தசத்தமாய் சகல சாதியாரும் பாஷைக்காரருமாகிய சதளத்தார்களே எக்காளம் நாகசுரம் கின்னரம் வீணை சுரமண்டலம் முதலான சகல வாத்திய சத்தங்களையுங் கேட்கும்போது நீங்கள் தாழவிழுந்து இராசா நிறுத்தின பொற்சிலையைப்பணிந்துகொள்ள கடவீர்களென்றும் அப்படிப்பணிந்துகொள்ளாதவன் அக்கினிச்சூளையில் தள்ளப்படுவானென்றுங் கூறினான். அப்பொழுது அந்த வாத்திய சத்தங்கள் கேட்க சகல சதளத்தாரும் பணிந்துகொண்டார்கள். மூன்றுபேர் மாத்திரம் அப்படிப்பணியவில்லை. அவர்கள் யூதச்சாதியார் அப்பொது அவர்கள்பேரில் பொறாமையாயிருந்தபாபேல் பட்டணத்தார் சிலர் இராசாவிடத்திற்போய் நீர் பாபேல் சீமையில் விசாரிப்புக்காரராக வைத்த சாத்திராகு மேஷாகு ஆபேத்நேகோ என்ற யூதப்புருஷர் மூன்றுபேரும் இராசாவாகிய உம்மைச்சட்டைபண்ணுகிறதுமில்லை உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்கிறதுமில்லை. நீர் நிறுத்தின பொற்சிலையை பணிந்துகொள்ளுகிறதுமில்லை என்று அவர்கள்மேல் குற்றஞ் சாட்டினார்கள். அப்போது இராசா சினங்கொண்டு அந்த மூன்று பேரையும் அழைத்துவரச்சொன்னான். அவர்கள் இராசாவுக்கு முன்பாக வந்துநிற்க அவன் அவர்களை கடிந்துகொண்டு நான் நிறுத்தின

பொற்சிலையை நீங்கள் பணிந்துகொண்டாற்சரி பணிந்துகொள்ளாதே போனால் இச்சணமே அக்கினிச்சூளையில் தள்ளப்படுவீர்கள். உங்களை என் கைக்கு தப்புவிக்குந் தேவன் யாரென்றான். அவர்கள் இராசாவுக்கு பிரத்தியுத்தரமாக எங்களுக்கு இதைபற்றிப்பயமில்லை. நாங்கள் ஆராதிக்கிற பராபரனே எங்களை தப்புவிக்க வல்லவராயிருக்கிறார். அக்கினிச்சூளைக்கும் இராசாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார். விடுவியாதே போனாலும் நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை நீர் நிறுத்தின பொற்சிலையை பணிந்துகொள்வதுமில்லை என்று உறுதியாய்ச்சொன்னார்கள். அப்போது இராசா கடுங்கோபங்கொண்டு சூளையை ஏழத்தனையாய் காங்கையாக்கும்படி கட்டளைகொடுத்து அந்த மூன்று பேரையும் அதிலே தள்ளுகிறதற்காக அவர்களைக் கட்டும்படிக்கு இராணுவத்தில் பலத்த ஆட்களுக்கு உத்தரவு கொடுத்தான். அந்தப்படியே அந்த மூன்று பேருந் தங்கள் வஸ்திரங்களோடுங் கட்டப்பட்டு அக்கினி சூளையின் நடுவே தள்ளப்பட்டார்கள். சூளை மிகவுங் காங்கையுள்ளது ஆனபடியால் அதிலுள்ள சுவாலை அவர்களை கட்டித்தள்ளின ஆட்களையே கொன்றுபோட்டது. அப்பொழுது இராசா பிரமித்துத்தீவிரமாய் எழுந்திருந்து நாம் மூன்றுபேரை அல்லோ கட்டுண்டவர்களாக அக்கினியில் தள்ளுவித்தோம் இதோ விடுதலையாய் அக்கினியின் நடுவிலே உலாவுகிற நான்குபேரைக் காண்கிறேனே அவர்களுக்கு யாதொரு சேதமுமில்லை. நான்காம் பேரின் சாயல் தேவர்களின் புத்திரருக்கு ஒப்பானதென்றுசொல்லி சூளையின் வாசல் அண்டைக்குவந்து உன்னதமான பராபரனுடைய ஊழியக்காரரே புறப்பட்டு வாருங்களென்

றான் அப்பொழுது அவர்கள் அக்கினியிலிருந்து வெளியே வந்தார்கள். பிரபுக்களும் சுபையதார்களும் இராசாவின்சேவகர் முதலானவர்களுங் கூடி வந்து அந்த மூனறுபேரின் சரீரங்கள்மேல் அக்கினி பலஞ் செய்யாமலும் அவர்களுடைய தலைமயிர் கருகாமலும் அவர்களுடைய சால்வை வேறுபடாமலும் அக்கினியின் மணம் அவர்களுக்கு உட்பிரவேசியாமலும் போயிற்றென்று பார்த்துக்கொண்டார்கள். இராசாவும் வசனித்து சொன்னதாவது தங்களுடைய பராபரனைத்தவிர வேறொரு தேவனையுஞ்சேவித்து பணியாதபடிக்கு அவலா நம்பினவர்களும் இராசாவின் வார்த்தையைத் தள்ளி தங்கள்சரீரங்களை யொப்புக்கொடுத்தவர்களும் ஆகிய இந்த மூன்று பேரையுந் தமது தூதனை அனுப்பிவிடுவித்த அவர்களுடைய பராபரன் தோத்திரிக்கப்பட்டவர். இந்த அடைவாகத்தப்புவித்துவிடத்தக்க வேறேதேவனே இல்லையென்றான்.

---

## ௰௩. பாடம்.

### க. பூமியைக்குறித்துச்சொல்லியது.

---

பூமியானது நித்தியமாயிருக்கப்பட்ட பொருளல்லத் தானாய் உண்டான பொருளுமல்ல அது பராபரனால் உண்டாக்கப்பட்டது. பராபரன் வானத்தையும் பூமியையும் அவைகளிலுள்ள எல்லாவற்றையும் ஆறுநாளைக்குள்ளாக படைத்தார். பராபரன் சிருட்டித்த இந்தப்பூமி மிகவும் விஸ்தாரமானது இதற்கு கடைசி யெங்கேயிருக்கும் திருநெல்வேலியில் மிகவும் உயர்ந்த ஒருபனைமேலேறி வடமுகமாய் கண் எட்டுமிடத்தில் அந்தக்கடைசி

யிருக்குமோ? அல்லவே. மதுரைப்பட்டணம் அத ற்கப்பாலே யிருக்குமே. பின்னும் அந்த பட்ட ணத்துக்கோபுரத்தின்மேலேறி வடக்கே பார்க்க வானமும் பூமியும் கூடச்சேருகிற இடம்போலத் தோன்றுகிற இடத்தில் அங்கே கடைசியிருக்கு மோ? இல்லையே. அதற்கப்பாலே திரிசிராப்பள் ளியிருக்கிறதே பின்னும் அவ்விடத்துக்கோட்டை க்குள் உயர்ந்த மலையுண்டு அந்த மலையிலிருந்து வடக்கே மிகவுந்தூரமாய் கண் எட்டுமிடத்திற் கடைசியிருக்குமோ? இல்லையே. அவ்விடத்திலிரு ந்து பத்துநாள் பிரயாணப்பட்டால் சென்னபட் டணம் போய்ச்சேரலாம் பின்னை அதுதானோ பூமிக்குக்கடைசி? அல்லவே. வங்காளத்துக்குபோ கிறதாயிருந்தால் சென்னபட்டணம் பாதிவழியும் இருக்கமாட்டாதே அப்படியானால் அங்கேதான் பூமிக்குக்கடைசியிருக்குமோ? அல்ல. வங்காளத் துக்குப்போக நாள்தோறும் இருகாதம் பிரயாண மாய்ப்போனாலும் ஐம்பதுநாளுக்கு அதிகஞ்செ ல்லும் இங்கிலாந்து சீமைக்குப்போகவேண்டுமா னால் முன்னூற்றறுபத்தைந்து நாளுக்கு அதிகமா கும் அது அவ்வளவு தூரத்திலிருந்தும் அவ்விடத் திலிருந்து அநேகர் கப்பல்யாத்திரைபண்ணி வட க்கே வெகுதூரம்போயும் அவர்களும் பூமியின் கடைசியைக்காணவில்லையே. இதற்கு முகாந்தரஞ் சொல்லுகிறேன் கோழிமுட்டைக்கு கடைசியிருக் கிறதா? எலுமிச்சம்பழத்துக்கு கடைசியுண்டா? ஒரு ஈயாவது எறும்பாவது அதின்மேலே நடக்க சுற்றிச்சுற்றி போகுமேயல்லாமல் கடைசிகாணமா ட்டாது அதுபோல பூமியும் உண்டையாயிருக்கி றபடியால் இதற்கின்ன இடத்திற் கடைசியென்று சொல்லக்கூடாது. ஒருவன் நேர்மேற்கே முகமாய் எப்போதும் பிரயாணம் பண்ணிக்கொண்டேயி

ருப்பாரானால் அவன் புறப்பட்டுப்போன இடத்தில் திரும்பவந்துசேருவான் சிலர் அப்படியே பூமியை சுற்றிப்போய் வந்திருக்கிறார்கள பூமி உண்டையாய் இராவிட்டால் அப்படி வரக்கூடாது.

## யச. பாடம்.

### உ. பூமியைக்குறித்துச்சொல்லியது.

பூமி உண்டையாயிருக்கிறதென்றும் அதைச்சிலர் சுற்றிப்போயிருக்கிறார்களென்றுஞ் சொன்னோமே. அவர்கள் பூமிக்கு மறுபக்கத்தில் என்னத்தைக்கண்டார்களோ. ஆமையின்பேரிலா யானையின்பேரிலா? எதின்பேரிலே தாங்கப்படுகிறது? பூமி தாங்கப்படுகிறதேயில்லை. அப்படியானால் அது விழாதா, விழமாட்டாது. எப்படியெனில் ஒருகல்லை யாகாசத்திலேயெறிந்தால் அது உடனே விழாமல் எறிந்த விசைக்கு தக்கதாக விழுகிறதற்கு நேரஞ்செல்லும். அன்றியும் ஒரு கயிற்றையெடுத்து ஒரு நுனியிற் கல்லைக்கட்டி மற்றொரு நுனியைக்கையிற்பிடித்து சுழற்றினால் கயிறு எவ்வளவு நீளமோ அவ்வளவுதூரத்தில் வட்டமிட்டுக்கொண்டிருக்குமே யல்லாமல் அப்பாலேயாவது சுழற்றுகிறவன்மேலேயாவது விழமாட்டாதே. அதுபோல பூமியானது ஆகாயமண்டலத்திலே சூரியனைச்சுற்றிக்கொண்டேதிரிகிறது. பூமி சூரியனைவிட்டுப்போகும்படிக்கான விசையுள்ளதாயிருக்கிறதினாலுஞ் சூரியன் பூமியை தன்னிடத்தில் இழுத்துக்கொள்ளுகிறகுணம் உள்ளதானதினாலும் பூமி இப்படியே சூரியனைச்சுற்றிக்கொண்டே வருகிறதென்று சாஸ்திரிமார் யுத்தியோடே ஒப்புவிக்கிறார்கள். சூரியன் அல்லவா பூமியைசுற்றியோடுகி

றது. நாள்தோறும் அதைக்காணுகிறோமே. பின்னை பூமிசூரியனைச்சுற்றி வருகிறதென்று என்னமாய் சொல்லலாமென்றால் மிகவுந் துரிதமாய் ஓடுகிற வண்டியிலேறியிருந்தால் இதுகாரியந் தெரியவரும். எப்படியெனில் வண்டியிற் சீக்கிரமாய் போகிறவர்களுக்கு கடக்கிறவீடு மரங்கள் முதலானவை தங்களை யிருந்த வேகத்தோடே விட்டோடுகிறதுபோலதோன்றுமே. ஆனால் ஒருவண்டியோடுகிற வேகத்தைப்பார்க்கிலும் பூமியானது பதினாயிரம்பங்கு அதிக வேகமாயோடும். இதனாலே நம்முடைய கண்ணுக்கு பூமி ஓடாமல் சூரியன் தான் ஓடுகிறதுபோலே தோன்றுகின்றது மேலும் ஒருவண்டி உருளையானதினாலே தான் நின்ற இடத்தைவிட்டு அப்புறப்படுகிறதுமல்லாமல் அப்படி அப்புறப்படுகிறபொழுது அச்சைச்சுற்றிக்கொண்டேவருகின்றது. அதுபோல பூமி சூரியனைச்சுற்றியோடுகிறதுமல்லாமல் தன்னைத்தானே சுற்றிக்கொள்ளுகிறதும் உண்டு. இப்படி தன்னை சுற்றிக்கொள்ளுகிறதினாலே இராப்பகலென்ற வேறுமைகளுண்டாகும். சூரியனைச்சுறறிக்கொள்கிறதினாலே பருவகாலங்களில் வேற்றுமைகள் வருஷந்தோறும் நடக்கின்றன.

---

## யரு. பாடம்.

### ங. பூமியிலுள்ள பிரிவுகளைக்குறித்துச் சொல்லியது.

---

இந்தப்பூமியிலே தரை யொருபங்குஞ் சலம் இருபங்கும் இருக்கும். அநேக தேசங்கள் கூடியிருக்கப்பட்டது கண்டமென்றுஞ் சலஞ் சுற்றியிருக்கப்பட்ட நிலந் தீவென்றுஞ் சொல்லுவார்

கள். ஐரோப்பா, ஆசியா, ஆபிரிகா, அமேரிகா, இந்நான்குங் கண்டங்களாம், இங்கிலாந்து, அயிர் லாந்து, சீலாந்து, இலங்கை, சுமத்திரா, மத்கஸ்க் கார், இவைமுதலானவை தீவுகளாம். கண்டங்களில் எல்லாவற்றிலும் பெரிது, ஆசியா. சிறிது, ஐரோ ப்பா. ஆசியாவிலே பத்து பிரதானமான இரா ச்சியங்களுண்டு. ஐரோப்பாவிலே பத்தொன்பது இராச்சியங்கள் உண்டு. ஆசியா கண்டத்திலுள்ள இராச்சியங்களாவன, துருக்கை, அராபி, பாரிசு, இந்து, பிரமதேசம், சீனு, திபேத்து, உருசியா, கீழ்த்தாத்தாரி, மேல்த்தாத்தாரி என்பவைகளே இவைகளில் இந்துதேசமானது. ௲அ௰. காதவழி நீளமும். ௲ச௰. காதவழி அகலமும் உள்ளது. அதில் ஏறக்குறைய ௰௩. கோடி சனங்கள் குடியிருக் கிறார்கள். நெல்முதலான தானியங்களும், அநேக விதமான கிழைகளும், பழங்களுஞ், சருக்கரையும், புகையிலையும், பஞ்சியும், அத்தேசத்திலே சம்பூர ணமாய் உண்டாகின்றன. இவைகளை மற்றத்தே சங்களுக்கும் வியாபாரிகள் கொண்டுபோவார்கள். நானாவித இரத்தினங்களும் மிகுதியாய் இருக்கின் றன. ஆடுமாடுமுதலான சாதுவான மிருகங்களும் யானை புலி கரடி நரி குரங்கு முதலான காட்டுமிரு கங்களும் பலவர்ணமாயும் பலசாதியாயுமிருக்கிற பறவைகளும் விஷமுள்ள பாம்பு தேள் முதலான வைகளும் உண்டு. இந்துதேசத்தின் வடக்கிலே தொடர்ச்சிமலையாய் நிற்கிற இமயமலையின் சிகரத் தில் உண்டாயிருக்கிற மிகுந்த குளிர்ச்சியினாலே மழை எப்பொழுதும் உறைந்ததாயிருக்கிறது. வடக்கே கங்காநதியும் மேற்கே இந்துநதியுந் தெற் கே காவேரி தாமிரவருணியும் விசேஷமான ஆறு களாம். கல்குத்தா உச்சினி அயோத்தியா காசி டில்லி கூர்ச்சரம் நாகப்பூர் ஐதராபாத்து செகநா

தம் வெம்பாய் ஸ்ரீரங்கபட்டணஞ் சென்னபட்டணந் திரிசிராப்பள்ளி மதுரா முதலானவை பிரதான பட்டணங்களாம்.

## ௰௩. பாடம்.

### இந்துதேசத்தைக்குறித்துச்சொல்லியது.

புராணங்களில் எழுதியிருக்கிறபடி கொஞ்சங்குறைய நாலாயிரம் வருஷங்களுக்குமுன் பரதகண்டம் என்னப்பட்ட இந்துதேசம் நான்கு இராச்சியங்களாக பிரித்திருந்தது. அவைகளில் முதலாவது இராச்சியம் வங்காளம் அயோத்தியா என்ற தேசங்களுள்ளது இந்த இராச்சியத்துக்குப்பிரதானமான பட்டணம் பாலிபுரம். இரண்டாவது இராச்சியம் விசையநகரம் என்னப்பட்டது. அது கிருஷ்டிணாநதிமுதற் கன்னிமாகுமரிவரையுமுள்ளது. மூன்றாவது கூர்ச்சரம் முதற்கங்காநதியின் சங்கமுகம்வரையும் உள்ளது. நான்காவது டில்லி லாகோர் மூல்த்தான் காசுமீரம் என்கிற தேசங்களுள்ளது. இந்த நான்கு இராச்சியங்களிலுள்ள நாடுகளை பற்பல இராசாக்கள் ஆளுகைசெய்தார்கள். அந்தபூர்வகாலத்திலுள்ள இராசாக்களுடைய செய்கைகளைக்குறித்துசரித்திரங்கள் சத்தியத்தோடே எழுதியிராதபடியால் இப்போது அநேககாரியங்கள் தெரியாது.

மகாபாரதத்திற் கிருஷ்டிணன் என்பவன் ஒரு அரசாட்சியை உண்டுபண்ணி அவனும் அவன் சந்ததியாரும் நானூறு வருஷகாலமாக துவாரகாபுரியில் இருந்து ஆண்டுவந்தார்களென்றும் மதுராபட்டணத்து இராசாவாகிய கஞ்சன் சராசந்தனு

டைய மகளை விவாகம்பண்ணினானென்றும் அந்தப்பெண்ணை கிருஷ்டிணனுக்கு வாக்குக்கொடுத்திருந்தபடியால் அவன் கஞ்சனை கொலைசெய்தானென்றும் அப்படி அவனைக்கொலைசெய்தபடியாற் சராசந்தன் கிருஷ்டிணன்மேற் படையெடுத்து மூன்றுவருஷகாலம் போர்செய்து அவனையும் அவன் ராணுவத்தையும் முறிய அடித்து இந்து நதிக்குமேற்கே ஓடிப்போகும்படி செய்தான். அவ்விடத்திலே கிருஷ்டிணன் துவாரகா கோட்டையைக்கட்டினான். சிலகாலத்துக்குப்பிற்பாடு தருமன் முதலான பாண்டவரை நட்புச்செய்து தன் சகோதரன் பலராமனையும் வீமனையும் அருச்சுனனையுங் கூட்டிக்கொண்டு சராசந்தன்மேல் யுத்தத்துக்குப்போய் சிலநாள் போர்ச்செய்கையிற் சராசந்தன் அபசெயப்பட்டு அவர்கள்கையில்விழ கிருஷ்டிணனும் அவன் சகோதரனும் மகாகொடுமையாய் அவனை கொலைசெய்தார்கள் இதெல்லாம் நடந்தது ஏறக்குறைய மூவாயிரம் வருஷமிருக்கும். ஆகிலும் இந்தச்சங்கதிகளைக்குறித்து நிச்சயமாய் சொல்லுகிறதற்கு இடமில்லை.

அநேகவருஷங்களுக்குப் பின்பு மகததேச இராசாவாகிய மகாநந்தன் முற்காலத்தில் வாலராமன் பலோத்காரமாய் பிடித்திருந்த தேசங்களைச் செயித்து தன்வசப்படுத்தி பாலிபுரத்தை இராசநகரமாக்கிக்கொண்டு இராசரீக்கம் பண்ணிவந்தான். அவன்காலத்தில் அல்லது கிறிஸ்து பிறக்கிறதற்குமுன் (௩௱௨௩ம்) வருஷத்திற் கிரேக்குதேசத்து இராசாவாகிய சிக்கந்தரென்றுபெயர் வழங்கிய மகா அலேக்குசந்தர் இந்துதேசத்தின்மேற் படையெடுத்து விதஸ்தமென்னும் நதியின் கீழ்கரையிற்போய் பாளையம் இறங்கியிருக்கையில்

இந்துதேச இராசனாகிய பார்த்திபன் - ௪௲ - துர
கங்களும் - ௩௱ - இரதங்களும் - ௨௱ - யானைக
ளும் - ௩௰௲ - ரசபுத்திர காலாட்களுமான வலு
சேனைகளையுஞ் சேர்த்துக்கொண்டு ஆற்றண்டை
யிலே அலேக்குசந்தருடன் எதிர்த்துப் போர்செ
ய்து செயங்கொள்ளாமல் இரண்டாமுறை போர்
செய்தபொழுது அலேக்குசந்தர் செயங்கொண்டு
பார்த்திபனைச் சிறைப்பிடித்துப்போகையில் மகா
அலேக்குசந்தர் பார்த்திபனைநோக்கி உனக்குச் செ
ய்யத்தக்க மரியாதை யென்னவென்று கேட்கப்
பார்த்திபன் இராசனுக்கேற்ற மரியாதை செய்ய
வேண்டுமென்றான். உடனே மகா அலேக்குசந்தர்
பார்த்திபனுடைய தயிரிய பராக்கிரமததை அறி
ந்து அவனுக்கு அநேக வெகுமதிகளைப்பண்ணிச்
சமாதானமாய் இராச்சியபரிபாலனம் பண்ணும்
படி செய்து சிந்துநதி அடுத்த அநேக இராச்சி
யங்களைச் செயித்துப் போகையிற் பார்த்திபனுக்
குக் கீழ்ப்படிந்திருந்த தக்கணத்து இராசா மகா
அலேக்குசந்தருடைய பராக்கிரமத்தையும் வெற்
றிகளையும் அறிந்து திகிலடைந்து அவருக்கு அப
யமிட்டு வெகுமதிகளை அனுப்பினான். பிற்பாடு
மகா அலேக்குசந்தர் தன் ராணுக்களுக்குட் கலக
முண்டானதால் இந்துதேசத்தை விட்டுப் பார்சு
தேசமார்க்கமாய் பாபேலோன் நகரிக்குப்போய்
அவ்விடத்தில் முப்பத்திரண்டு வயதில் இறந்தான்.
அவன் சேனாதிபதிகளில் ஒருவனாகிய செலுக்கஸ்
என்பவன் இந்துதேசத்திற் படையெடுத்து வெ
குசீமைகளைக்கட்டி ஆண்டுவந்தான். இதுமுதல்
அநேக வருஷமாய் நடந்த சங்கதிகள் திட்டமாய்த்
தெரியாது.

---

# ௰௭. பாடம்.

## இந்து தேசத்தைக் குறித்துச் சொல்லிய உத்தரசரித்திரம்.

---

கிறிஸ்துப் பிறந்த ஆயிரமாண்டு முதல் இந்து நதிக்கு மேற்கேயுள்ள கசினிபட்டணத்துச் சுலுத்தான் மகம்மது என்பவன் இந்துதேசத்தின் மேற் பத்து முறை படையெடுத்து அநேக தேசங்களைக் கொள்ளை யடித்துக் கோவில்களையும் அழித்து எண்ணிறந்த செல்வங்களை அபகரித்து மகா கொடுமையாய் அரசாண்டுவந்தான். (௲௩௱௯௮ம்) வருஷத்தில் திமிரபேக்கு என்னுந் துலுக்கன் டில்லி நகரிமட்டும்போய் அங்கே உள்ள ஊர்களைப்பாழாக்கி அநேகம் பேரை வெட்டிக் கொலை செய்தான். (௲௫௱௨௬ம்) வருஷத்தில் சுலுத்தான் பாபரென்பவன் மோகுல் அரசாட்சியை ஸ்தாபித்து டில்லி நகரியில் வாசம்பண்ணி ஆண்டுவந்தான். பிற்பாடு (௲௭௱௩௮ம்) வருஷத்தில் பாரிசு தேசத்து இராசாவாகிய நாதர்சா இந்து தேசத்தின்மேற்படையெடுத்து அதில் மிகுதியான பங்கைத் தன்வசப்படுத்தி, ஆளுகைசெய்தான். அக்காலத்திற் கருநாடகத்தில்த் துலுக்கருக்கும் மராட்டியருக்கும் போர் நடந்தது. மராட்டியர் பிடித்துக்கொண்ட ஆர்க்காடு திரிசிராப்பள்ளி யென்னும் பட்டணங்களைத் துலுக்கர் பிடித்து முன்னிருந்த நபாபுக்களைத்தானே ஆளும்படி வைத்தார்கள்.

(௲௬௱௯௰ம்) வருஷத்திற் கும்பினி யென்று சொல்லப்படுகிற இங்கிலாந்து தேசத்து வர்த்தக சங்கத்தார் இப்போது கல்குத்தா நகரமிருக்கும்

இடத்திற் பண்டகசாலையைக் கட்டிக்கொண்டு இராசாக்களுடைய அபிமானத்தினாலே வியாபாரம்பண்ணிக்கொண்டு வருங்காலத்திற் வெப்பாய் தலைச்சேரி சென்னபட்டணம் முதலான இடங்களை யடைந்து கொண்டார்கள். பிற்பாடு இராசாக்கள் ஒருவருக்கொருவர் பண்ணின யுத்தங்களிற் கும்பினியாரவர்கள்செய்த உதவிக்கு பதிலாக அநேக தேசங்களைப் பெற்றுக் கொண்டார்கள். (௧ளஎ ௬௭-ம்) வருஷத்தில் ஐதராலி என்பவன் கும்பினியாரோடு எதிர்க்கும்படி யெத்தனித்தான். இவன் முன்பு சிபாயியாக இருந்தவன். வரவரத் தன்பராக்கிரமத்தினாலே படைத்தலைவனாகிக் கடைசியாக மைசூர் இராச்சியத்தைத் தன்வசப்படுத்திக்கொண்டு சீரங்கபட்டணத்தை மிகவும் பெலனாய்க்கட்டி அதிலிருந்து அரசாண்டு வந்தான். இவன் கும்பினியார்மேலே பகைகொண்டு பலமுறையும் அவர்களோடே யுத்தம்பண்ணி தனக்குண்டாயிருந்த திரளான சேனைகளாலே கும்பினியாருடைய ராணுக்களிற் சிலரை செயித்து சிறைப்படுத்தினான். பின்பு ஐந்துவிசை அவன் சேனைமுறியடிக்கப்பட்டு இரண்டு வருஷத்திற்குள்ளாக அவன் இறந்துபோய் அவன் மகன் டிபு சுலுத்தான் சிம்மாசனத்தில் ஏறினான். இவன்யுத்தத்துக்கென்று வெகு பிரயத்தனங்களைச் செய்துவருங்காலத்திற் கும்பினியார் இவன்மேற் படையெடுத்துச் சீரங்கபட்டணத்தை முற்றிக்கைசெய்யப்புறப்பட்டு வந்தார்கள். அந்தப்பட்டணம் காவேரி நதியினாலே சூழப்பட்டதுமாய். ஐம்பதினாயிரம் ராணுக்களாற் காக்கப்பட்டதுமாயிருந்தது. ஆற்றோரத்திற் கும்பினியார் சேனைவந்திறங்கி இராத்திரி காலத்தில் மூன்றுகையாய் பிரிந்து ஆற்றைக்கடந்து கோட்டைதவிர மற்ற இடங்கள்யாவற்றையும் பிடித்துக்

கொண்டார்கள். அப்போது கோட்டையையும் பிடித்துக்கொள்வார்களென்று பயந்து டீபுசுலுத்தான் கும்பினியாருடனே சமாதான உறவுசெய்து தன் குமாரர்களில் இரண்டுபேரையும் பிணையாகக் கொடுத்தான். இதுமுதல் ஆறுவருஷமாய் டீபுசுலுத்தான் யுத்தத்துக்கு ஆயத்தம்பண்ணி மராட்டியருந் தன்பட்சமாய் நிற்க உறவுபண்ணி வரும்பொழுதிற் கும்பினியார் மறுபடியுஞ் சீரங்கபட்டணத்தின்மேற் படையெடுத்து முற்றிக்கை செய்து பிடித்துக்கொண்டார்கள். கோட்டையைப் பிடிக்கிறபொழுது வாசலில் நின்ற ராணுக்களோடே டீபுசுலுத்தான் அபசெயப்பட்டு மாண்டான்.

இத்தேசத்திலே கும்பினியாரவர்கள் கலகுத்தா சென்னபட்டணம் வெம்பாய் ஆகிய இம்மூன்று இடங்களைத் தலைமையாக ஏற்படுத்தி வியாச்சியங்கள் முதலானவைகளை விசாரித்துத் தீர்க்கும்படிக்கு நியாயாதிபதிகள் முதலான துரைகளைவைத்துத் தேசசமாதானத்தை காக்கும்படியாக அநேகசேவகர் சிபாயிகள் முதலான ராணுக்களுக்குச் சம்பளங்கொடுத்து இங்குள்ள சரக்குகளை வாங்கி மற்றத்தேசங்களுக்கு அனுப்புகிறதும் இங்கிலாந்துதேசத்துச் சரக்குகளை இந்தத்தேசத்திலே வருவிக்கிறதும் அவர்கள் முயற்சியாயிருக்கிறது.

---

## ௰அ. பாடம்.

### எருசலேம் நகரத்தைக் குறித்துச்சொல்லியது.

---

பூர்வீகத்தில் எருசலேம் நகரத்துக்குச்சாலேம் என்றும் எபூஸ் என்றும் பேர்கள் உண்டாயிருந்தன. தாவீது இராசாகாலமுதல் கானான்சேத்திலு

ள்ள சகல நகரங்களிலும் அதுபெரிதும் முக்கியமுமான நகரம் அது யோர்தான்நதிக்கு மேற்கே (௨௰) காததூரத்திலும் பெரியகடலுக்கு கிழக்கே (௪௰)காததூரத்திலும் யூதா பென்யமீன் என்ற கோத்திரத்தார் நாடுகளுக்கு மத்தியிலே இருந்தது. சீயோன்மலையும் மோரியாமலையும் அகராமலையும் அந்த நகரத்துக்குள்ளாகவும் ஒலிவமலையும் கல்வாரியென்னப்பட்ட கொல்கத்தாமலையும் பெத்தானியா பெத்பாகே என்னுமூர்களும் கீதரோன் ஆறும் யோசபாத் இன்னுமென்னும் பள்ளத்தாக்குகளும் அந்த நகரத்துக்கடுத்த புறம்பாகவும் சிறப்பைக்கொடுத்துக்கொண்டிருக்கின்றன.

ஆபிரகாமுடைய காலத்திலே அந்த நகரம் மெல்கிசேதேக் என்னும் இராசனுக்கு பிரதான நகரியாயிருந்ததென்றும் அதற்குச்சாலேம் என்னும் பேர் உண்டாயிருந்ததென்றுந்தோன்றுகின்றது. பின்பு மோசேயினுடைய காலத்திலே கானான்தேசத்தில் மிகுந்த வல்லமையுள்ளவர்களாகிய எபூசியருடைய இராசாங்கத்துக்கும் பிரதான நகரியாயிருந்தது. அவர்கள்காலத்திலே சீயோன்மலை நகரத்துக்கு புறம்பேயிருக்கிறபொழுது அவர்கள் அதின்மேலே பலத்த ஒரு கோட்டையைக்கட்டி அதற்கு எபூஸ் என்று பெயரிட்டார்கள். அதற்குப் பின்பு எபூஸ் சாலேமென்னும் இவ்விரண்டு நகரத்துக்கும் எருசலேம் என்னும் ஒரேபேராயிற்று. எபூசியருடைய இராசனாகிய அதோனிசேதேக் என்பவனை யோசுவாவென்பவன் எதிர்த்து யுத்தஞ்செய்து முறியடித்தான். ஆகிலும் அந்தக்கோட்டையை பிடித்ததாக தோன்றவில்லை. யோசுவா மரணம் அடைந்த சிலகாலத்துக்குப்பின்பு யூதகோத்திரத்தார் அந்த நகரத்தைப்பிடித்துச் சுட்டெரித்தார்கள். எபூசியர் அதை மறுபடியுங்கட்டி

த்தாவீது இராசன்காலம்வரைக்கும் ஆண்டுவந்தார்கள். தாவீது அவர்களை யெதிர்த்து யுத்தஞ்செய்யப்போனபொழுது அந்தக் கோட்டையைப் பிடிக்கக்கூடாதென்று எபூசியர் எண்ணி நிந்தனையாய்ப்பேசினார்கள். ஆகிலுந் தாவீது யோவாப்பைக் கொண்டு அதைப் பிடித்துத் தன் வசமாக்கிக்கொண்டான். யோவாப்பு அதைப் பிடித்துத் தந்தபடியால் தாவீது அவனை தனக்குப் படைத்தலைவனாக்கினான். அந்தக் கோட்டை யிருந்த சீயோன்மலையின்மேலே இராசா தனக்கொரு அரண்மனையும் மற்றும் அநேகம் வீடுகளுமுள்ள ஒருநகரத்தை கட்டி அதற்குத் தாவீது நகரமென்று பேரிட்டான். பிற்காலங்களிலே அந்த நகரத்தைச்சூழ மூன்றேகால் நாழிகைவழிச் சுற்றளவாய் ஒரு பெரிய மதிற் கட்டப்பட்டது. அந்தமதிலுக்கு பத்து வாயில்களிருந்தன.

சாலமோன் இராசன் குமாரனாகிய இராகாபெயாம் காலத்திலே இந்த நகரி எகிப்பத்து தேசத்து இராசாவாகிய சீசாக்கென்பவனாலே பிடிபட்டுக் கொள்ளையிடப்பட்டது. ஏறக்குறைய (௩௱எ௰)வருஷங்களுக்குப் பிற்பாடு பாபிலோன் தேசத்திராசாவாகிய நேபுகாத்நேசாரென்பவன் அந்த நகரியைப் பிடித்து தனக்கு இறை கொடுக்கும்படி செய்துபோனான். (உ௰)வருஷங்களுக்குப்பின்பு மறுபடியும் அந்த நகரிமேற் படையெடுத்து அதிலுள்ள செல்வங்களை யெல்லாங் கொள்ளையடித்து ஆலய முதலான எல்லாவற்றையும் அதனைச்சூழ்ந்திருந்த மதில்களையும் அழித்துப்போட்டுக் குடிகளெல்லாரையுஞ் சிறையாக்கிக் கொண்டுபோனான். (எ௰)ம் வருஷத்தில் அவர்கள் சிறையிருப்பைவிட்டு விடுதலையடைந்து திரும்பிவந்து எருசலேம் நகரத்தையும் அதிலுள்ள தேவாலயத்தையுங் கட்டினார்கள்.

ஏறக்குறைய (௪௱௪௰) வருஷங்களுக்குப் பிற்பாடு சூரியதேசத்து இராசாவாகிய அந்தியோக்கென்பவன் எருசலேம் நகரியைப் பிடித்து யூதர்களை மிகவும் உபத்திரவப்படுத்தினான். (௱) வருஷங்களுக்குப் பிற்பாடு பொம்பிராயன் அதைப் பிடித்து உரோமருக்கு கப்பங்கொடுக்கும்படி சட்டங்கட்டினான். (௬௭) வருஷங்களுக்குப் பிற்பாடு உரோமரால் ஏரோதென்பவன் இராசப்பட்டம் பெற்று எருசலேம் நகரத்துக்கு முற்றிக்கைசெய்து தன் வசப்படுத்திக்கொண்டான். இவன் ஆளுகைசெய்துகொண்டிருக்குங்காலத்தில் உலக இரட்சகராகிய கிறிஸ்துநாதர் பெத்லேகேம் ஊரிலே பிறந்தார். ஏரோதிராயன் இறந்து அவனுக்குப்பிற்பாடு சிம்மாசனம் ஏறின அவன் மகன் உரோமரால் தள்ளப்பட்டு அந்தத் தேசத்தை ஆளும்படி துரை ஒருவன் அனுப்பப்பட்டான். பிற்பாடு யூதர்கள் உரோமருக்கு இணங்க மனமில்லாதவர்களாய் மூர்க்கங்கொண்டு பற்பல இடங்களிலும் விசேஷமாய் எருசலேம் நகரியிலுங் கலகஞ் செய்ததின்பேரில் உரோமருடைய இராயனாகிய வெஸ்பாசியன் காலத்திலே அவன் மகனாகிய தீத்தூஸ் என்பவனைக்கொண்டு பெரியபடையெடுத்து எருசலேம் நகரியை அநேக நாளாய் முற்றிக்கைசெய்து பிடித்துக்கொண்டு மதில்கள் எல்லாவற்றையும் இடித்து தகர்த்து நிர்மூலமாக்கி ஆலயத்தைச் சுட்டெரித்துக் குடிகளில் அநேகரைச் சிறையாக்கிக்கொண்டு விற்றுப்போட்டான். இது கிறிஸ்துபிறந்து (எ௰)ம் வருஷத்தில் நடந்தது. எருசலேம் நகரம் இவ்விதமாய் அழிக்கப்பட்டது முதல் இந்நாள்வரையும் அது சிறப்புக்கொள்ளாமலும், யூதராலே ஆளப்படாமலும் புறத்தேசத்தாராலேயே ஆளப்பட்டு வருகின்றது. இப்பொழுது அது துலுக்கர் அதி

காரத்துக்கு உட்பட்டிருக்கிறது. அதிலுள்ள குடிகள் பலதேசத்தாராய் கொஞ்சங்குறைய (௨௰௲) பெயரிருப்பார்கள்.

INDIAN INSTITUTE OXFORD

---

## ௰௬. பாடம்.

### எருசலேம்பட்டணத்திலுள்ள தேவாலயத்தைக் குறித்துச்சொல்லியது.

---

தாவீது இராசா அரசாண்ட காலத்தில் மெய்த்தேவனாகிய பராபரனுக்கு ஒரு ஆலயத்தைக் கட்ட வேண்டுமென்று தீர்மானித்து அதற்கு வேண்டிய சாமான்களை யெல்லாஞ் சேகரஞ் செய்தான். ஆகிலும் அவனே அதைக் கட்டவில்லை. அவன் குமாரனாகிய சாலமோன் அதைக் கட்டினான். அது எருசலேம் பட்டணத்திலுள்ள மோரியாமலையின்மேற் கட்டப்பட்டது. அதற்கேற்ற சாமான்களெல்லாம் வந்து சேர்ந்தபிற்பாடு அதைக்கட்டி முடிக்கும்படிக்கு (௭௨) வருஷஞ் சென்றன. அது வரிக்கற்களினாலும் மிகவும் அழகும் உறுதியுமுள்ள மூவகையான மரத்தினாலும் அந்தந்த இடங்களிற் பொன் வெள்ளி பித்தளை இவைகளின் தகடுகளினாலும் சிறந்த அலங்காரமாய்க்கட்டப்பட்டது. இப்படி கட்டி முடிந்த (௩௪)ம் வருஷத்திலே எகிப்பத்து இராசாவாகிய சீசாக்கென்பவன் எருசலேம் நகரியைப் பிடித்தபொழுது தேவாலயத்திலுள்ள பொக்கிஷங்களை யெல்லாங் கொள்ளையிட்டான். பிற்பாடு நேபுகாத்நேசார் என்கிறவன் அந்தப் பட்டணத்தைப் பிடித்துக் கொள்ளையடித்துத் தேவாலயத்தை முழுவதும் அக்கினியினாலே எரித்துப்போட்டான். (௭௰) வருஷங்களுக்குப் பிற்பாடு யூதர்கள் செருபாபேலென்பவனும்லெ ஏவ

ப்பட்டு அதை மறுபடியுங் கட்டினார்கள். ஏறக்குறைய (௫௱)வருஷங்களுக்குப் பிற்பாடு அது பழுதுபட்டிருந்தபடியால் ஏரோது இராயன் அதைப்பழுதுபார்க்கவுங் (கூடக்கட்டவும்) (கூ) வருஷமாய் (ய அஐ) தொழிலாளிக்கு செலவுகொடுத்தான். அதோடேகூட யூதர்கள் ஒவ்வோரிடத்திலே அதிக விஸ்தாரமாகக் கட்டிக்கொண்டே வந்தபடியால் அது முற்றுங் கட்டித் தீர (சகூ) வருஷஞ் சென்றனவென்று சொல்லுவார்கள். இந்த ஆலயத்திற்கு அலங்காரவாயில் முதலிய (கூ) வாயில்களும் அன்னியருக்கென்றும் யூதருக்கென்றும் ஆசாரியருக்கென்றும்மூன்று பிரகாரங்களும் உண்டாயிருந்தன. யூதர்கள் செலுத்தும் பலிகளெல்லாம் இந்த ஆலயத்திற் கொண்டுவந்து செலுத்தப்படுந் தேவாலயத்தைக் காக்கவும் அதிலுள்ள ஆசரிப்பு முதலான ஊழியங்களெல்லாவற்றையும் நிறைவேற்றவும் இலேவியென்னப்பட்ட கோத்திரத்தார் பராபரனாலே தெரிந்துகொள்ளப்பட்டார்கள். யூதச்சனங்களிற் புருஷரானவர்கள் எல்லாரும் வருஷாவருஷம் பஸ்காமுதலிய மூன்று பண்டிகைகள்தோறுந் தேவாலயத்திற்குக் காணிக்கைகளையும் பலிகளையுங் கொண்டுபோய்ச் செலுத்துவார்கள். உரோமருடைய படைத்தலைவனாகிய தீத்தூஸ் என்பவன் எருசலேம் நகரியை முற்றிக்கைசெய்து பிடித்தபொழுது அந்த ஆலயஞ் சேதப்படாதபடிக்கு கூடியமட்டும் பிரயாசப்பட்டும் அவன் ராணுக்கள் யூதர்கள்மேற் கடுங்கோபம் உடையவர்களாய் ஆலயத்தைச் சுட்டெரித்துப்பிற்பாடு அதிற் பொக்கிஷமிருக்குமென்று நினைத்து அதைக் கண்டடையும்படியாக ஒருகல் மற்றொருகல்லின்மேல் இராதபடிக்குத் தகர்த்து முற்றும் அழித்துப்போட்டார்கள்.

# ௨௰. பாடம்.

## மோசேயைக்குறித்துச் சொல்லிய சரித்திரம்.

---

ஆபிரகாமுடைய சந்ததியாராகிய இஸ்ரவேல் சனங்கள் எகிப்பத்துத் தேசத்திலே சற்றேறக்குறைய (௱௨௰) வருஷக்காலமாய் அடிமைப்பட்டிருந்தார்கள். எகிப்பத்து இராசா அவர்களை மிகவும் ஒடுக்கினதுமல்லாமல் அவர்கள் பெருகினாற் கலகம் பண்ணுவார்களென்ற பயத்தினாலே அவர்களுக்குப் பிறக்கும் ஆண்குழந்தைகள் அனைத்தையும் அத்தேசத்து மத்தியில் ஓடும் நீல என்ற நதியிற் போட்டுவிடவேண்டுமென்று கட்டளை கொடுத்தான் இப்படி நடக்குங் காலத்தில் இலேவியர் கோத்திரத்தானாகிய ஒருவன் ஒரு ஆண்பிள்ளையை பெற்றான். மூன்று மாதம் வரையும் தாயானவள் அதை ஒளித்துவைத்தாள். பின்னும் அதை மறைக்கக்கூடாமல் ஒரு சிறு கூடையிலே கிடத்தி அதை அந்த ஆற்றோரத்திலுள்ள நாணலில் வைத்துவிட்டு அதற்கு என்ன சம்பவிக்கும் என்றறிய அதின் தமக்கை தூரத்திலே நின்று பார்த்துக்கொண்டிருந்தாள். அப்பொழுது இராசாவின் குமாரத்தி தன் பணிவிடைக் காரிகளோடே குளிக்க ஆற்றங்கரையில் இறங்கிவருகிறபொழுது நாணலின் நடுவேயிருக்கிற பெட்டியைக் கண்டு அதைக் கொண்டுவரச்சொல்லித் திறந்து பிள்ளையைக் கண்டாள். பிள்ளை அழுதது, அப்பொழுது அவள் அதின்பேரில் இரக்கமாகி இது இஸரவேலருடைய பிள்ளைகளில் ஒன்றென்றாள் அப்பொழுது அதின் தமக்கை இராசாவின் குமாரத்தியோடே உமக்காக இந்தப் பிள்ளையை வளர்க்கும்படிக்கு இஸரவேல் பெண்

களில் முலைகொடுக்கிற ஒருஸ்திரியை அழைத்து வரப் போகட்டுமா என்று உத்தரவு பெற்றுக்கொண்டு பிள்ளையின்தாயை அழைத்து வந்தாள். இராசகுமாரத்தி அவளோடே நீ யிந்தப் பிள்ளையை யெடுத்துக்கொண்டுபோய் எனக்காக வளர். உனக்கு கூலிகொடுப்பேன் என்றாள். அந்த உத்தரவு படியே தாய் பிள்ளையை எடுத்துக்கொண்டுபோய் வளர்த்தாள். அவனுக்கு மோசே என்ற பெயரிடப்பட்டது. அவன் பெரியவனாய் வளர்ந்து சகல வித்தைகளையுஞ் சாஸ்திரங்களையும் படித்துவந்தான். அவன் எண்பது வயதுள்ளவனானபொழுது கர்த்தர் அவனுக்குத் தரிசனையாகி இஸ்ரவேல் சனங்களை எகிப்பத்து தேசத்தினின்று விடுதலையாக்கும் பொருட்டாய் அவனைத் தானாபதியாக ஏற்படுத்தி அவனுக்குத் துணையாக அவன் சகோதரனாகிய ஆரோனையும் நியமித்து இஸ்ரவேல் சனங்களை அனுப்பிவிடவேண்டுமென்று இராசாவிடத்திற் கேட்கும்படி அவர்களை அனுப்பினார். அந்தப்படியே அவர்கள் போனார்கள். இராசாவோ அவர்கள் சொற்படி நடவாமல் விரோதித்தபடியால் அவர்கள் இராசாவின்மேலும் அவர் சனங்கள் எல்லாரின்மேலும் (௰) கொடிய வாதையை வரப்பண்ணினார். அந்த வாதைகளைப் பொறுக்கக்கூடாமல் இராசா கடைசியிலே இஸ்ரவேல் சனங்களை அனுப்பிவிட்டு அவர்கள் கொஞ்சத்தூரம் போவதற்குள்ளாக விசனங்கொண்டு மூர்க்கத்தோடே அவர்களைப்பின்றொடர்ந்து அவர்கள் கடந்துபோன சமுத்திரத்தில் அவனும் அவன் ராணுக்களும் போகையில் அமிழ்ந்தழிந்தார்கள். எகிப்பத்துத் தேசத்தில் இருந்து புறப்பட்ட இஸ்ரவேலர் (௬) இலட்சம் புருஷராம். அவர்கள் எல்லாருங் கால்நடையாய் கானான் தேசத்திற்குப் போகப் பயணப்பட்டார்கள்.

ஆகிலும் அவர்கள் பராபரனுடைய வார்த்தையை நம்பாததினாலும் அவருக்கும் அவரால் அதிகாரம் பெற்றிருந்த மோசேயுக்கும் விரோதமாக அடிக்கடி கலகம் பண்ணினதினாலும் பராபரன் அவர்களை (சய)வருஷக்காலம் வனாந்தரங்களில் அலையப்பண்ணினார். எகிப்பத்து தேசத்திலிருந்து புறப்பட்டு ஐம்பதாம் நாளிலே அவர்கள் பாளையம் இறங்கியிருந்த இடத்துக்கு அருகான சீனாயென்னப்பட்ட பருவதத்தின்மேற் பராபரன் மோசேயை வரவழைத்துப் பத்துக்கற்பனைகள் அடங்கிய சன்மார்க்கப்பிரமாணத்தை யுரைத்து விக்கிரக ஆராதனைக்கு எவ்வளவேனும் இடங்கொடுக்கக்கூடாதென்று உறுதியாய்க் கற்பித்தார். அவர்களுக்காகப் பராபரனுடைய உத்தரவின்படி மோசே அநேகம் அற்புதங்களைச் செய்தான். அவர்களைப் போஷிக்கும்படி வானத்திலிருந்து மன்னாவை ஆகாரமாக வருஷிக்கப்பண்ணிக் கற்பாறையிலிருந்து சுத்தசலம் ஆறுபோல ஓடவுஞ்செய்து பிடிக்கத்தக்க காடைகளையும் ஏராளமாக வருவித்தான். சனங்களுடைய வஸ்திரங்கள் பழமையாய் போகவுமில்லை அவர்கள் பாத இரட்சை தேய்ந்துபோகவுமில்லை இஸ்ரவேல் சனங்களை யெதிர்த்து விரோதித்த ஆமலேக்கியரையும் மீதியானியரையும் இவைமுதலிய மற்ற சனங்களையும் முறியடித்துச் செயித்துக் கடைசியிலே கானான் தேசத்திற் பிரவேசித்துக் குடியேறுகிறதற்கு முன்னே மோசே தனக்கு பதிலாக யோசுவா என்பவனை நியமித்து பிற்பாடு பிஸ்காமலையிலேறி அவ்விடத்தில் இறந்தான். பிற்பாடு இஸ்ரவேல் சனங்கள் யோர்தான் நதியைக் கடந்து அதிலுள்ள அக்கிரமக்காரருமாய் விக்கிரகஆராதனைக்காரருமாய் இருந்த கானானியரையும் பராபரனுடைய கட்டளையினாலே துரத்தி அவர்கள் தேசத்தை இஸ

ரவேல் சனங்களுடைய கோத்திரங்களுக்குள்ளே பங்கிட்டுக்கொண்டு மெய்த்தேவனாகிய பராபரனுடைய கற்பனைகளுக்குக் கீழ்ப்படிந்து நடந்ததற்குத் தக்கதாக வாழ்ந்தார்கள்.

## உக. பாடம்.

### இராத்திரியைக்குறித்துச்சொல்லியது.

பிரகாசமுள்ள சூரியன் மேற்கே சாய்ந்து மறைய இரா வுண்டாகும். அப்பொழுது வானத்திலும் பூமியிலும் இருள்நிறையும். பனி பூமியை மூடமுன் உட்டணமாயிருந்த காற்று ஆறி குளிர்ந்து வீசும். வனங்களிலுள்ள புட்பங்கள் தங்கள் வர்ணமுள்ள இலைகளை மடித்து மூடி மறுநாள் உதயம் வரத் தலையைச்சாய்த்துக் காத்திருக்கும். தோப்புகளிலுள்ள பட்சிகள் தங்கள் இன்பமான பாட்டுகளை நிறுத்திச் சிறகின்கீழ் தலையை மறைத்து மரக்கிளையின் மேல் நித்திரைபண்ணும். ஊர்தோறும் இருக்கப்பட்டசேவல் கூவாமல் இருக்கும். கோழிக்குஞ்சுகள் தாயின் சிறகின்கீழ்க் கூடிக்கொண்டு தூங்கும். அவற்றின் தாயும் அப்படியே அசையாமல் இருக்கும். பகலெல்லாம் வயல்வழியாய் வேலைசெய்த மாடுகள் ஊரில் வந்தடையும். மலைப்பக்கமாய் மேய்ந்து திரிந்த ஆடுகள் வெளியிடங்களிற் கூட்டமாய் வந்து நெருங்கிப் படுத்துக்கொள்ளும். கொல்லர் தச்சர் முதலான தொழிலாளிகள் தங்கள் வேலையையும் பிள்ளைகள் தங்கள் விளையாட்டையும் விட்டுத் தங்கள் தங்கள் படுக்கையிற் படுத்து உறங்குவார்கள். கைக்குழந்தை சமாதானத்தோடுங் கவலையில்லாமையோடுந் தாயின் மார்பில் நித்திரைசெய்யும் இப்படியிருக்குங்காலத்திற் காட்டுமிருகங்கள் மாத்திரஞ்

சஞ்சரிக்கும் நரிகள் ஊளையிடும் நாய்கள் குலைக்கும் பன்றிகள் உறுமும் பாம்புகள் இரையும் ஆந்தைகள் வீச்சிடும் கூகைகள் குளறும் யானைகள் வீரிடும் சிங்கமும் புலியுங் கெர்ச்சிக்கும்.

மேற்சொல்லியபடி மனிதரெல்லாரும் நித்திரை பண்ணி நேரிடுகிற மோசத்தைப் பார்க்கக்கூடாமலுந் தங்களைத்தாமே காப்பாற்றக் கூடாமலும் இருக்கிறபொழுது அவர்களைக் காக்கிறவரார்? உறங்காமல் இருக்கிறவர் ஒருவருண்டு. அவர் பட்டப்பகலிலே காணுகிறதுபோலக் கார்இருளிலுங் காணுவார். சூரிய சந்திரன் இல்லாதவேளையிலும் நெருங்கி நிற்கிற மேகங்களுக்குள் நட்சத்திரம் ஒன்றும் விளங்காத காலத்திலும் வீட்டிலே விளக்கில்லாதபொழுதும் அவர் எல்லா இடங்களிலும் பார்க்கிறவருமாய் பூமியிலுள்ள குடிகள் எல்லாரின்மேலுங் கண்ணோக்கமாய் விசாரிக்கிறவருமாய் இருக்கிறார். இப்படி உறங்காமற் காக்கிறவர் பராபரனே. நாம் இளைப்பாறும்படிக்கு நித்திரையுண்டாக்கினார். நாம் சுகமாய் நித்திரை அடையும்படிக்கு இராத்திரியை யுண்டாக்கினார். பட்சமுள்ள தாயானவள் தன் குழந்தையின் நித்திரை கலையாதபடிக்கு சத்தங்களை அமர்த்துகிறதுபோலவும் குழந்தை கண்களுக்கு கூச்சமுண்டாக்குகிற வெளிச்சத்தை சீலைபோட்டு மறைக்கிறதுபோலவும், பராபரன் தம்முடைய குடும்பத்தாராகிய மனிதர்கள் சுகமாய் நித்திரைபண்ணும்படிக்கு சூரியனுடைய வெளிச்சத்தை மறைத்து இருளால் பூமியை மூடி சகலத்தையும் அமர்ந்திருக்கச் செய்கிறார். ஆகையாற் பிள்ளைகளே இருள் நீங்க காலையிலே சூரிய உதயத்தைக் காணுகிறபொழுது உங்களை இராமார் தயவாய் காப்பாற்றின பராபரனுக்குத் துதிசெய்து நாடோறுஞ் செய்யவேண்டியதை பத்தியோடே

தொடங்கக்கடவீர்கள். படுத்துக்கொள்ளுகிறபொழுதும் எழுந்திருக்கிறபொழுதும் அவருடைய புகழ் உங்கள் இருதயத்திலும் உங்கள் நாவிலும் இருக்கக்கடவது.

## உஉ. பாடம்.

### பகலைக்குறித்துச்சொல்லியது.

மேற்கே சாய்ந்து அஸ்தமித்த சூரியன் குறிக்கப்பட்ட காலம்வரையுந் தன்னை மறைத்துக்கொண்டு பிற்பாடு கிழக்கே உதயமாகிறபொழுது மிகவுஞ் சிறப்பாய் காணப்படும். அதினுடைய பிரகாசத்தினாலே வானத்திலிருக்கிற நட்சத்திரங்கள் கிரகங்கள் காணப்படாது இருட்டிலே யிறங்கிவந்த மூடுபனிகள் அதைக் கண்டு சிதைந்து மறையும். காடுகளிற் சஞ்சரிக்கிற துஷ்டமிருகங்கள் தத்தம் இருப்பிடத்தைத் தேடி ஒளித்துக்கொள்ளும் மற்ற சீவசெந்துக்கள் நித்திரைதெளிந்து சந்தோஷித்தைக் காட்டும். வனத்திலுள்ள மயில் தன் அழகுள்ள தோகையை விரித்து சூரியனுக்கு காட்டும். வானம்பாடி உயரப் பறந்து இன்பமான பாட்டுகளைப் பாடும். சேவல் விடியற்காலத்துக்கு அடையாளம் போலக் கூவிச் சமுசாரிகளை வேலைக்குப் போக எழுப்பும். தொழிலாளிகள் எழுந்து வேலை தொடங்குவார்கள் இடையர் பால் கறந்து ஆடு மாடுகளை மேய்ச்சலுக்குக் கொண்டுபோவார்கள். பரவர் கட்டுமரத்தில் ஏறிக் கடலில் மீன்பிடிப்பார்கள். தறிகாரர் பாவோடுவார்கள். கடைக்காரர் கடை திறந்து விற்பனை செய்வார்கள். பிரயாணக்காரர் சாமான்களைக் கட்டிக்கொண்டு பிரயாணப்படுவார்கள். ஒழுங்குள்ள பிள்ளைகள் நித்திரைதெ

ளிர்த உடனே பராபரனை வணங்கி விளையாடாமற் படிப்பையும் பிரயோசனமான மற்றக் காரியத்தையுந் தொடங்குவார்கள். இவ்விதமாக அவர் அவர் தமக்குரிய வேலைகளை நாள்தோறும் முயற்சிசெய்து சாயந்திரம்வரையும் பிரயாசப்படுவார்கள்.

---

வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரா........ர்
வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவ.......ர்
வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுத..-ல்
வைகலை வைத்துணரா தா........ .... ....... ர்

நாலடியார்.

---

## உரு. பாடம்.

### மனிதர் ஒருவருக்கொருவர் இருக்கிற சம்பந்தம்.

---

தயையுள்ள பராபரனாலே இவ்வுலகத்திற் சிருட்டிக்கப்பட்ட வைகளெல்லாம் ஒன்றோடொன்று விசித்திரமான வகையாய் இணைக்கப்பட்டு ஒன்றுக்கொன்று பிரதி யாதரவாயிருக்கின்றன. இந்தப் பூமிக்கும் இதிலுள்ள மலை மணல் முதலானவைகளுக்கும் ஆதாரம் பூதங்கள் விருட்சங்கள் பூண்டுகள் கீரை வருக்கங்கள் முதலானவை பூமியினாலே ஆதரிக்கப்படுகின்றன, மிருகங்கள்முதலானவை பூமியிலிருந்து முளைக்கும் புல் பூண்டு முதலானவைகளாலே ஆதரிக்கப்படுகின்றன. பூமியிலிருந்து முளைத்த பூண்டு பூச்சிக்கு இரையாகும். பூச்சி குருவிக்கும் இரையாகும். குருவி மிருகங்களுக்கு இரையாகும். அது போலவும் மிருகங் கழுகுக்குங் கழுகு புழுவுக்கும் புழு பூண்டுக்கும் பூண்டு பூமிக்கும் இரையாகும். இவைகளை வசப்படுத்திக் கொள்ளுகிற மனிதர்களும் மரித்து அவைகளுக்கு இரையாகிறார்கள்.

இப்படிப்பட்ட ஒழுங்கின்படி உலகவஸ்துக்கள் ஒவ்வொன்று மற்றொவ்வொன்றுக்கு உதவியாகப் படைத்திருக்கின்றன. புலி மான் முதலிய அநேக மிருகங்களால் மனிதர் உடுத்திக்கொள்ளத்தக்க தோலை அடைகிறார்கள். வேட்டைநாய்களாலே முயல்முதலான உண்ணத்தக்க மிருகங்கள் அகப்படும். குதிரை யானை ஒட்டகம் இவைகள் பழகிச் சுமையெடுக்கும். மாடு உழுது பயிர்செய்யும். பசு பால் கொடுக்கும். ஆடுகள் கம்பளம் உண்டாக்க மயிர் கொடுக்கும். குருவிகளைப் பிடிக்க இராசாளி உதவும். வானம்பாடி குயில் கரிக்குருவி இவைகளுடைய ஓசை செவிக்கு இன்பமாகும். வெள்ளாட்டுக் குட்டிகளின் விளையாட்டும். மயிலினுடைய அழகும் மலை அருவிகளுடையசிறப்புங் கண்ணுக்கு இன்பமாகும். உடுக்கும்படி பட்டுப்பூச்சி பட்டுநூல்கொடுக்கும். உண்ணும்படி தேனீய்க்கள் தேனைக் கூட்டும். இதுபோல மனிதரும் ஒருவருக்கொருவர் நன்மை செய்கிறார்கள். கப்பற்காரன் கூலிக்காக தனக்குச் சொந்தமாயிராத சரக்குகளையுங் கப்பலில் ஏற்றவேண்டிய இடத்திற் கொண்டுபோய் சேர்ப்பான். சமுசாரி மிகுதியாய் உழுது பயிர்செய்து அதின்பலனிற் கொஞ்சமாத்திரஞ் சொந்தச் செலவுக்கு வைத்து நின்றதை மற்றவர்களுக்குங் கொடுப்பான். இவ்விதமாக அவனவன் தம்மட்டுக்குமாத்திரமல்ல மற்றவர்களுக்கும் உதவும்படியாய்ச் செய்ய வேண்டியது கடவுளது சித்தமாம். ஆகையாற் பெலனுள்ளவர்கள் பெலன் இல்லாதவர்களுக்கு உதவி செய்யவேண்டும். அறிந்தவர்கள் அறியாதவர்களுக்கு சொல்லிக் கொடுக்கவேண்டும். எல்லாரிடத்திலும் அன்புந் தயவும் உள்ளவர்களாயிருக்கவேண்டும். ஒருவன் தானே ஒருபெரிய மாளிகையைக் கட்டக்கூடாதே வானந் தோண்டவுஞ் செங்கல்

செய்து சுடவும் நீறுண்டாக்கி கூட்டவுஞ் சுவரை க்கட்டி உயர்த்தவும் மேற்கூரை செய்துபோடவுஞ் சன்னல் கதவு முதலானவைகளை உண்டாக்கி முடிக் கவும் ஒருவனுலே கூடாதே பற்பல தொழிலாளி கள்சேர்ந்து வேலை பார்த்தால் அல்லோ அது நி றைவேறும்.

பிறர்க்குதவி செய்யார் பெருஞ்செல்வம்வே......று
பிறர்க்குதவி யார்க்குபவர் பேரும் பிறர்க்கு....வி
செய்யாக் கருங்கடனீர் சென்று புயன்முகந்....து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்.................கு

நன்னெறி.

## உச. பாடம்.

### மிருசா கண்ட உவம தரிசனை.

ஒருநாள் தியானம்பண்ணும்படிக்கு மலைமேல் ஏறிப்போனேன் அப்பொழுது மலை உச்சியில் இ ளைப்பாறி வருங்காலத்தில் மனித ஆயுவைக் குறித் து சிந்தனைபண்ணி மனிதன் நிழலைப் போலவுஞ் சி வன் சொப்பனம்போலவுமாம் என்று சொல்லி யெ ழுந்தேன் அப்பொழுது எனக்கு நேராய் ஒரு பெ ரிய கல்லின்மேல் மேய்ப்பனைப்போல ஒருவர் எதி ர்ப்பட்டு எனக்குச் சமிக்கைகாட்டி அழைத்தார். நான் கிட்டப்போய் அவர் யாரோவென்று பயந்து அவர் பாதத்தில் விழுந்தேன். அவரோ முகம் மலர் ந்து என் பயத்தை யாற்றி மிருசாவே நீ தனித்துப் பேசினதைக் கேட்டேன். எனக்குப் பின்சென்று வாவென்று அழைத்து மலையில் எல்லாவற்றுக்குமே லான உச்சியிற் கொண்டுபோய்க் கிழக்கே கண்ணோ க்கி உனக்குக் காணப்படுகிறதைச் சொல்லென்றார். நான் விஸ்தாரமான பள்ளத்தாக்கையும் அதில் பெரிய வெள்ளம் ஓடுகிறதையுங் காண்கிறேன் என்

றேன். அதற்கவர் நீ காண்கிற பள்ளத்தாக்கு துக்கமும் அதில் ஓடுகிற வெள்ளம் நித்தியமென்னப்பட்டசமுத்திரத்தில் ஒருபங்குமாம் என்றார். இந்த வெள்ளம் புறப்படுகிற இடமும் போகிற இடமுங் காணுதபடிக்குக் கார்மேகம் நிற்கிறதே அதென்னவென்று கேட்க, நீ காண்கிற வெள்ளம் அவ்வளவும் உலகம் உண்டாயிருக்கிற காலமாம். வெள்ளத்தின் முதலிலுங் கடையிலும் நிற்கிற கார்மேகங்கள் உலகமுண்டானதற்குமுன் சென்ற காலத்தையும் உலகத்தின் முடிவுக்குப் பின்பு வருங்காலத்தையும் அறியாமையாம். இந்த வெள்ளத்தை யுற்றுக்கவனித்து அதிலே நீ காணுகிறதை சொல்லு என்றார். மத்தியிலே ஒரு பாலங் காண்கிறேன் என்றேன். நீ காணுகிற பாலம் மனிதனுடைய ஆயுவு அதைக் கவனித்துப்பாரென்றார். அதைக்கவனித்துப் பார்த்தபொழுது அந்தப்பாலத்துக்கு எழுபது கண் முழுமையாயிருக்கிறதாகவும் மற்றுஞ் சில அரைகுறையாயிருக்கிறதாகவும் ஆக அந்தப் பாலத்துக்கு உத்தேசம் நூறு கண்கள் இருக்கிறதாகக் கண்டேன். அந்தக் கண்களை நான் எண்ணிக்கொண்டிருக்கிறபொழுது அவர் ஆதியில் இந்தப் பாலத்துக்கு ஆயிரங் கண்கள் இருந்தனவென்றும் ஒரு பெரிய வெள்ளம் இப்போதிருக்கிறவை தவிர மற்றவைகளை யெல்லாம் வாரிக்கொண்டு போயிற்றென்றுஞ் சொன்னார். பின்னும் அந்தப் பாலத்தை உற்றுப்பார்க்கும்பொழுது அதன்மேல் திரளான சனங்கள் நடக்கிறதையும் அந்தப் பாலத்தின் இருகடைகளிலும் கார்மேகங்கள் இருக்கிறதையுங் கண்டேன். மேலும் அந்தப் பாலத்தின்மேல் நடக்கிறவர்கள் அநேகர் பாலத்துக்குள்ளே கூடி வெள்ளத்தில் விழுகிறதையும் பார்த்தேன். இதென்ன காரணமென்று சோதிக்கிறபொழுது அந்தப் பாலத்தில் அளவிறந்த

பொறிகள் இருக்கிறதையும் அவைகள்மேற் கால் பட்ட உடனே வாசல்போல்த் திறந்து கீழே வெள்ளத்தில் ஆட்கள் விழுந்து காணமற்போகிறதையுங் கண்டேன். இந்தப்பொறிகள் பாலத்தின் துவக்கத்தில் அதிக நெருக்கமாயிருந்தபடியால் அநேகம்பேர் கூட்டங்கூட்டமாய்க் கார்மேகத்திலிருந்து புறப்பட்டவுடனே அவைகளுக்குள் விழுந்து போனார்கள். போகப்போக அந்தப்பொறிகளும் பாலத்தின்மத்தியிற் குறையப்பட்டன பிற்பாடு கடைசியிலிருக்கிற முழுக்கண்கள் வரையும் போகப்போக அவைகள் பெருகியிருந்தன. அப்பாலேயிருந்த அரைகுறையான கண்களிலுஞ் சிலர் நடந்தார்கள் ஆனால் அவர்கள் அவ்வளவுதூரம் நடந்ததோடே கிந்திக்கிந்தி இளைப்பினாலே ஒவ்வொருவராய் அரைகுறையான கண்களில் விழுந்துபோனார்கள்.

பாலத்தின்மேல் நடக்கிறவர்களை நான் கவனித்துப்பார்த்து அவர்களில் அநேகர் கவலையில்லாதவர்களாய்ச் சிரித்து விளையாடிக்கொண்டிருக்கையிற் சடுதியாய்க் கீழே விழுந்துபோகிறதையும் அப்படிப்போகையில்த் தப்பும்படியாகக் கையெட்டும் எந்தக்காரியத்தையும் பிடித்துக் கொள்ளுகிறதையும் நான் கண்டு மிகவுந் துக்கம் அடைந்தேன் சிலர் தியானம்பண்ணுகிறதுபோல வானத்தை அண்ணாந்துபார்த்து நடந்துபோகையிற் பொறியிற் கால்பட்டு மறைந்துபோனார்கள். மற்றும் அநேகர் தங்கள் கண்களுக்குமுன்னே ஆடுகிற அழகுள்ள குமிழிபோன்ற சிலபொருள்களை மிகுந்த ஆசையோடேதொடர்ந்து எட்டிப்பிடிக்கும்படி கையை நீட்டுகிற சமையத்திற் கால்தப்பிக் கீழே விழுந்து போனார்கள் இதுவும் அல்லாமற் சிலர் பட்டையங்களோடும் மருந்துப்பைகளோடும் இங்கும் அங்கும்

ஓடி நேரில்லாத பொறிகளில் மற்றவர்களை விழும் படியாய்த் தள்ளுகிறதையும் பார்த்தேன்.

அப்பொழுது எனக்கு இந்தப்புதுமையைக் காண்பித்தவர் என்னுடனே பின்னும் உனக்கு விளங்காதது ஏதாகிலும் காணப்படுகிறதாவென்று கேட்டார். அப்போது என்கண்களை ஏறெடுத்துப்பார்த்துப் பாலத்துக்குமேலே ஆகாசத்திற் பறக்கிறதாகவும் பாலத்தின்மேல் அடிக்கடி இறங்குகிறதாகவும் இருக்கிற அநேக பட்சிக்கூட்டங்களாகிய கழுகுகள், காகங்கள், கூகைகள், புறாக்கள், இவைமுதலியவைகளையும் இவைகள் விசேஷமாய்ப் பாலத்தின் மத்தியிலே அதிகக்கூட்டமாயிருக்கிறதையுங் கண்டு இதன்பொருள் என்னவென்று கேட்டேன். அதற்கு அவர் மனிதர்களுக்குக் கவலைகளையும் முயற்சிகளையும் உண்டாக்குகிற பொறாமை, பொருளாசை, வீண்பத்தி, கோபஞ், சிற்றின்பம் இவைமுதலியவைகளேயாம் என்றார். நான்கண்ட இவ்வளவையுங்குறித்து ஆச்சரியத்தையடைந்து பாலத்திலிருந்து வெள்ளத்தில் விழுந்துபோனவர்கள் எங்கே சேர்ந்திருப்பார்களோ என்று கேட்க அவர்கள் அத்தோடேபோய் கார்மேகத்துக்கு அப்புறம் நித்தியஸ்தலத்திற் பிரவேசிக்கிறார்களென்றும் அவ்விடத்தில் நல்லோருக்குப் பரிசுத்தமுஞ் சவுக்கியமுமான இடமுண்டென்றும் தீயோருக்கு வேதனையும் இருளுமான இடமுண்டென்றுஞ் சொன்னார். அந்த இடத்துக்கு என் கண்களைத்திருப்பி அவ்விடத்தில் நின்ற கார்மேகத்தைக்குறித்தும் பொருள் கேட்கிறதற்கு எண்ணினேன். ஆனால் நான் திரும்புகிறத்துக்குள்ளாக என்னோடேபேசிவந்தவர் காணாமற்போய்விட்டார்.

# உரு. பாடம்.

## வீண்பெருமை ஒழித்தலைக் காட்டிய குறவனுடைய சரித்திரம்.

தென்சமுத்திரத்திற் சாலோமோன் தீவுகள் என்னப்பட்ட சில தீவுகள் உண்டாம். அநேகவருஷங்களுக்குமுன் இந்தத் தீவுகளை அரசாண்ட ஒருவன் மிகுந்த நீதி நியாயத்தோடே சகலத்தையும் நடப்பிவித்துத் தன் குடிகளுக்கு மிகுந்த சவுக்கியம் உண்டாகும்படி செய்தான். இந்தத் தீவுகளில் உயர்குலத்தான் ஒருவன் அநேக செல்வங்களைச் சம்பாதித்துக்கொண்டு தன் குலத்துக்கு மேன்மை உண்டாக்கின தருமகுணங்களை மறக்கும்படியாகச் செல்வத்தினாலே மயக்கங்கொண்டு புத்தியில்லாமையினால் உண்டாகிய அகந்தையினாலுஞ் சிற்றின்பத்தில் அமிழ்ந்திய குணங்களினாலுந் தனக்கு உண்டாயிருந்த கனத்தைப் பாராட்டும்படிக்குச் சிந்தையுள்ளவனா யிருந்தானே அல்லாமல் தருமகாரியங்களைக்குறித்துச் சிந்தையுள்ளவனா யிருந்தான் இல்லை. அவனுக்குக் கடலோரத்தில் ஒரு வீடு இருந்தது. அவ்விடத்தில் அவன் வேட்டை யாடுகிறதிலும் மீன்பிடிக்கிறதிலுங் காலத்தைப்போக்கிவருவான் ஆகிலும் அவன் வீட்டுக்குங் கடலுக்கும் மத்தியில் ஈச்சஞ்செடிகள் நெருங்கி வளர்ந்திருந்தபடியாற் சிறிதுவேளை வேட்டையாடுகிறதில் தடைப்பட்டான் அந்த ஈச்சஞ்செடிகள் ஒரு குறவனுடைய காணியானதினாலே கிரயத்துக்குக் கொடுக்கவேண்டுமென்று வேண்டியமட்டுங் கேட்டிருந்துங் குறவனுக்கு அவைகளாலேதானே தனக்குச்சீவனம் நடக்கிறதென்பதையிட்டு அவைகளை விக்கிறதில்லையென்று சொன்னதினால் முருட்

டுக்குணமுள்ள ஒரு குறவனுடைய சவுக்கியத்தின் நிமித்தந்தான் வேட்டையாடுகிறதில் தடையாயி ருக்கிறது தனக்கு லட்சணமல்லவென்று தீர்மானி த்து வெயில்காய்ந்து பெருங்காற்று அடிக்கிற சமையத்தைப்பார்த்து அவைகளை சுட்டெரித்துப் போடும்படிக்கு உயர்குலத்தான் தன் வேலைக்கார ருக்கு கட்டளைகொடுத்தான் அவர்கள் அப்படியே செய்தார்கள். குறவன் தனக்குண்டான நஷ்டத் தைப்பார்த்து அதினால் உண்டான பெரிய துக்கத் தோடே அந்தப்பெரிய மனுஷன் இடத்திற்போய் முறையிட்டான். அவனோ இவனை வைது அடித்து அனுப்பிவிட்டான். அப்போது அந்த எளியவன் இராசாவின் இடத்திற்போய் அவர் பாதத்தில்விழு ந்து, தனக்கு அனியாயஞ் செய்தவன்மேற் கட்ட ளைகேட்டு வாங்கிக்கொண்டான். பிரதிவாதி இரா சாவிடத்தில் அந்தக் காரியத்தை ஒத்துக்கொண்டு உயர்குலத்தோருக்கு இழிகுலத்தோர் செய்யவே ண்டிய மரியாதையும் வணக்கமும் அந்த எளியவன் செய்யாததினாலே தான் செய்தது அநியாயமல்ல என்று அகங்காரத்தோடே சொன்னான். அப்போ து இராசாவானவர் அந்த உயர்குலத்தானைப் பார் த்து உன்பூட்டனுக்கு என்ன உயர்குலம் உண்டா யிருந்தது அவன் என் மூதாக்கள் அரண்மனையில் விறகுவெட்டுகிறவன் அவன் அப்போது ஒருவிசை காண்பித்த தயிரியத்துக்காகவும், உண்மைக்காக வும் அவனுக்கு வெகுமானமாக இழிகுலத்தாரிலி ருந்து எடுத்துக்கொள்ளப்பட்டு மேன்மையடைந் தானே அவனுக்குண்டான மேன்மை உனக்குண் டாயிருக்கிற மேன்மையைப் பார்க்கிலும் மிகவும் பெரிது. எப்படியெனில் அவனுக்குண்டான மே ன்மை நன் முயற்சியினாலே வந்தது. உனக்கோ பிறப்பினாலே மாத்திரம் வந்தது. லவுகீக கவலை

கள் அற்றுப்போகவும் இராச்சியத்திலுள்ள மற்றக் குடிகள் எல்லாருக்கும் நன்மையுண்டாக்குவதில் தன் காலத்தைப் போக்கும்படிக்குஞ் செல்வமுங் கனமுங் கொடுக்கப்பட்டதென்று உணராத ஒரு உயர்குலத்தான் என் இராச்சியத்தில் இருக்கிறது எனக்கு மிகுந்த விசனமாயிருக்கிறதென்றார்.

இப்படி இராசா பேசினபொழுது பிரதிவாதி இப்படிச்சொன்னால் இழிகுலத்தார் உயர்குலத்தாரை மரியாதைபண்ணமாட்டார்களே உயர்குலத்திற் பிறந்தவர்கள் இழிகுலத்தாரை மதிக்கத்தகாதென்று அகங்காரத்தோடே புலம்பினான். அதற்கு இராசா நேராய்ப் புத்தியடையமாட்டாதவன் வருத்தத்தின் வழியாய் ஒருவேளை அடைவானென்று சொல்லி, தன் ராணுவக்களில் ஒருசேர்வைகாரனைப் பார்த்து அனுமா இந்தவாதியையும் பிரதிவாதியையும் உடுப்பைக்கழற்றி, எல்லாவற்றிலுந் தூரத்திலிருக்கிற தீவிலே இராத்திரிகாலத்தில் இவர்கள் இருவரையுங் கரையேற்றி விட்டுவிட்டு திரும்பிவாவென்று கட்டளையிட்டார். அப்படியே செய்து வந்துவிட்டான். அந்த இரண்டுபேரையும் விடப்பட்ட தீவிலே இருக்கிற சனங்கள் காட்டுச்சனங்களாயும் அவர்கள் கைக்குள் அகப்படுகிற மற்றவர்களைக் கொலைசெய்து தின்கிறவர்களாயும் இருந்தார்கள். அவர்களுக்கு யாதொருகல்வியும் வித்தையுந் தெரியாது. அந்த இரண்டுபேருங் கரையேறின இடத்தில் அநேகம் ஈச்சஞ் செடிகளிருந்தன. உயர்குலத்தான் இழிகுலத்தானோடேகூட இருக்கிறது குறைச்சலென்று நினைத்து அந்த ஈச்சஞ் செடிகளில் ஒளித்துப் பிரிந்துபோகலாம் என்றிருந்தான். ஆனால் அவர்களை அந்தத்தீவுக்குக் கொண்டுவந்த கப்பலிற் காணப்பட்ட விளக்குகளைத் தீவார் கண்டு உதயமான உடனே தடியோடே ஏக

மாய் அந்த இடத்துக்கு வந்து அந்த இரண்டுபே
ரும் ஒளித்திருக்கிறதைக் கண்டு ஆரவாரத்தோடே
தடிகளை ஓங்கி அவர்களைச்சூழ்ந்து நெருங்கினார்
கள். அப்போது உயர்குலத்தான் தனக்குண்டா
யிருந்த பெருமை உதவாததென்று உணர்ந்தான்.
வஸ்திரமில்லாதபடியால் வெட்கத்தையுங் குளிர்ச்
சியையுந் தாங்கக் கூடாமலுங் கொலைசெய்ய வந்த
வர்களிடத்தில் இரக்கங் காணத்தக்கதாக யாதொ
ன்றையுஞ் செய்யத் தெரியாமலுந் தன்னால் முன்
அசட்டைபண்ணப்பட்டவன் அண்டையிற்போய்
ஒதுங்கினான். குறவனோ எளியவனானபடியால் வஸ்
திரமில்லாமலிருக்கிறது அவனுக்கு வருத்தமில்லை.
வருத்தமுந் துன்பமுமே வழக்கமானபடியால் மர
ணம் அவனுக்கு அதிக பயமுள்ளதல்ல, அவன் பி
ழைப்புக்கு முயற்சிபண்ணிவந்த தொழில் இந்தத்
தீவாருக்கும் உபயோகப்படும் என்றும் அதனால்
தனக்கும் பிரயோசனமுண்டாகுமென்றும் எண்
ணிச் சில ஈச்சம் இலைகளைப்பிடுங்கி தரையில் உட்
கார்ந்துகொண்டு அவர்களுக்குச் சமிக்கைகாட்டி
அந்த இலைகளைப் பின்னத்தொடங்கினான். தீவார்
இதினாலே என்னசெய்வானோ என்று கிட்டவந்து
பிரமிப்போடே பார்த்துக்கொண்டே நின்றார்கள்.
குறவன் கொஞ்சநேரத்துக்குள்ளே ஒரு குல்லா
வைப்போலே லட்சணமாய் முடைந்து அந்தத்
தீவாருக்குள்ளே தலைவனாயிருந்தவன் தலையில் வை
த்தான். மற்றவர்கள் தங்கள் தலைவனுடைய சிறப்
பைப் பார்த்துச் சந்தோஷித்தினாலே தங்கள் தடி
களை தரைமேலே போட்டுவிட்டு இந்தப் புதுமை
யைச் செய்தவனைச் சூழ்ந்து கைகொட்டிப் பா
டிக் கூத்தாடினார்கள். பிற்பாடு ஒவ்வொருவனுக்
கும் இப்படிபட்ட குல்லாவைச் செய்துகொடுக்க
வேண்டுமென்று ஆசையுடையவர்களாய் இருந்தார்

கள். குறவன் அப்படியே ஒவ்வொன்றாய்ச் செய்துகொடுக்க அவனோடே இருந்த உயர்குலத்தானை சும்மாயிருக்கக்கண்டு தடிகளை எடுத்து அடிக்கத் தொடங்கினார்கள். குறவன் அதைப் பார்த்து முன் அவன் செய்த அனியாயத்தை மறந்து அவனுக்காகப் பரிந்துபேசி, அவனுக்கு இந்த வித்தை தெரியாதென்றும் உத்தரவுகொடுத்தால்நான் குல்லாவை முடைய அவன் ஈச்சம் இலைகளைக்கொண்டு வந்து கொடுப்பானென்றுஞ் சொன்னான். தீவார் அந்தக் குல்லாமுடைகிறதை நன்றாய்ப் பார்க்க வேண்டுமென்று அவன் கிட்டவே எல்லாரும் உட்காந்து சும்மாயிருக்கவேண்டுமென்பதினாலே குறவன் சொன்ன யோசனைக்குச் சந்தோஷத்தோடே சம்மதித்துக் குறவனுடைய சொற்படியே ஊழியஞ் செய்துவாவென்று உயர்குலத்தானுக்கு உத்தரவு கொடுத்தார்கள். பிற்பாடு அந்தத் தீவில் எந்தத் திசையிலிருந்தும் ஆண் பெண் குழந்தையாகிய எல்லாருங் குல்லாவைவாங்கிக்கொள்ளும்படிக்குக் கூட்டங்கூட்டமாக வந்தார்கள். மேலும் குறவன் இருக்கும்படிக்கு ஒருசாலை கட்டவேண்டுமென்று சொல்லி ஓலை முதலானவைகளைக் கொண்டுவரும்படிக்கு உயர்குலத்தானை அனுப்பி வருவித்துச் சாலைகட்டிக் கொடுத்தார்கள். மேலும் அவர்கள் வருகிறபொழுது உண்கத்தக்கப் பதார்த்தங்களையுங் கூடக்கொண்டுவந்து முதலாவது குறவனைச் சாப்பிடச்சொல்லிப் பிற்பாடு மற்றவனைச் சாப்பிடும்படிக்குக் கொடுப்பார்கள்.

இப்படி மூன்றுமாதம் பிரயாசப்பட்ட உயர்குலத்தானுக்குப் புத்தி வந்து ஒரு இராத்திரி அந்தக் குறவனைப் பார்த்து நான் நினைத்ததுஞ் செய்ததுந் தப்பிதந்தான் முயர்ச்சியினாலுஞ் சற்குணத்தினாலுமே அல்லாது பிறப்பினாலேமாத்திரம் உண்

டான பெருமை பெருமையல்ல நான் காண்பித்த பொறுமையையும் அநீதியையும் நீ காண்பித்த தயையோடுஞ் சற்குணத்தோடும் ஒப்புமை பார்க்கிறபோது எனக்கு மிகுந்த வெட்கமுந் துக்கமும் உண்டாயிருக்கின்றன. நான் முன்னிருந்த நிலைமையில் தேவன் என்னைத் திரும்பவைக்கச் சித்தமானால் நான் முன்செய்த அநியாயத்துக்காக உன்னை என்வீட்டிலே வைத்துக்கொண்டு என் ஆஸ்தியிற் பாதியுங் கொடுப்பேனென்று அழுது சொன்னான். அவன் சொன்னபடியே செய்தான். எப்படியெனில், அவர்கள் இருவரையும் அந்தத் தீவுக்குக் கொண்டுபோன சேர்வைக்காரன் இராசாவினுடைய உத்தரவினாலே திரும்ப அவ்விடத்துக்குப்போய் அந்தத் தீவாருக்கு அநேக வெகுமானங்களைக் கொடுத்து அந்த இரண்டுபேரையுங் கூட்டிக்கொண்டு வந்தான். அது முதல் அந்த உயர்குலத்தான் சாந்தமாயும் யோக்கியமாயும் நடந்துகொண்டான். மேலும் உயர்குலத்திற் பிறந்து வீண்பெருமை காட்டுகிறவனைக் குறவனிடத்தில் அனுப்ப வேண்டுமென்று அத்தீவிற் பழமொழி வழங்கிவருகிறது.

---

சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்........கா
னீதி வழுவா நெறி முறையின்.... ....மேதினியி
லிட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோ......ர்
பட்டாங்கி லுள்ளப.... .... .... .... ......டி.

[நல்வழி.]

---

## உ௬. பாடம்.

### கிழட்டுக்கோழியையும் இளஞ் சேவலையுங் குறித்துச் சொல்லியது.

ஒருநாள் கிழட்டுக்கோழி ஒரு இளஞ்சேவலைக் கண்டு அது தான் வளர்த்த குஞ்சு என்றறிந்து

என் பிள்ளையே தாயைப்பார்க்கிலும் உனக்குப் புத்தி அதிகமென்று நீ எண்ணிப் பெருமையடைந்திருப்பாய். ஆனாலும் உனக்கு நான் புத்திசொல்லுகிறேன் கேள் இன்ன இடத்திற் கிணறுண்டே அதிலே நீ யெட்டிப்பாராதே, பார்த்தாயானால் உனக்கு மோசம் வரும் என்றது. பிற்பாடு அது யோசனைபண்ணி, இதென்ன பயித்தியமான காரியம். கிணற்றில் எட்டிப்பார்க்கிறதினாலே மோசம் என்னவென்று சொல்லிக் கிணற்றுக்கருகே போய் கழுத்தை நீட்டி யெட்டிப்பார்க்க இதன் நிழல் மற்றொரு சேவல்போற் காணப்பட்டது. உடனே இதற்கு ரோசமுண்டாய் கழுத்துரோமங்களைச் சிலிர்க்க அதுவும் அப்படியேசெய்தது. பின்னும் இது சினம் பொறுக்கமாட்டாமல் அத்தோடே சண்டைபோடக் கிணற்றிற்பாய்ந்து தட்டழிகிறபொழுது ஐயோ என்தாயின் பேச்சைக் கேளாமற்போனேனே, அவளைப் பார்க்கிலும் எனக்குப் புத்தி அதிக மென்று எண்ணித் துணிந்தபடியினாலே நான் இப்போது கெட்டுப் போகிறேனே என்று புலம்பி இறந்துபோயிற்று. ஆகையாற் பிள்ளைகள் தங்கள் பெற்றோர்களாவது அதிக வயதும் புத்தியும் உடையவர்களாவது சொல்லுகிறதை அற்பமென்று எண்ணக்கூடாது.

---

## ௨௭. பாடம்.

### பலகதைகள்.

ஒருநாள் ஒருநரி யிரைக்காகத் திரியும்போது நல்ல மூந்திரிகைப்பழக் கொத்தொன்று எதிர்ப்பட்டது. அதைப் பறிக்கும்படியாக வேண்டியமட்டுங் குதித்தும் எட்டவில்லை அப்போது அது சீ புளிக்குமேயென்று சொல்லிப்போய்விட்டது.

ஒரு ஓநாய் ஒரு ஆட்டுக்குட்டியைக்கொன்று மிகவுந் துரிதமாய்த் தின்றதினாலே ஒரு எலும்பு தொண்டையிற் குத்திக்கொண்டது. அதையெந்தவகையிலுந் தானெடுக்கக்கூடாமல் ஒரு நாரையைக்கண்டு உன்கழுத்தை நீட்டி என் தொண்டையில் அகப்பட்டிருக்கிற எலும்பைப் பிடுங்கிப் போடும்படி தயவுசெய்தாற் பெரிய வெகுமானத்தைக்கொடுக்கிறேன் என்றது. அந்தப்படியே நாரை எலும்பைப் பிடுங்கி வெகுமானத்தைக் கேட்டதற்கு ஓநாயானது அப்பாலேபோ உன் தலையை அப்போதே கடித்துப்போடாமற்போனது பெரிய வெகுமானமாய் நினை என்று சொல்லிவிட்டது.

ஒருநாள் ஒருகாகம் வாயிலே நல்ல இரையகப்பட்டதோடே மரத்தின்மேற் பறந்து உட்கார்ந்தது. ஒரு நரி அதைக்கண்டு மரத்தின்கீழே வந்து ஓ பட்சியே உன்னுருவம் இவ்வளவு அழகாயிருக்கிறதே உன்சத்தம் எத்தனை யின்பமாயிருக்குமோ அதைக்கேட்க ஆசையோடே யிருக்கிறேனென்றது. அதனாற் காகங் கர்வங்கொண்டு கொஞ்சம் பாடும்படியாக வாயைத் திறந்திட்டது. உடனே யிரை கீழே விழ நரி யதை யெடுத்துக்கொண்டு போய்விட்டது.

ஒரு நரி பட்டிக்காட்டின் வழியாய் போகும்பொழுது வீட்டின்மேல் ஒருசேவலிருக்கக்கண்டு ஓ சிநேகிதனே சுகமாயிருக்கிறாயா இப்போதுண்டாயிருக்கிற கட்டுப்பாடு கேள்விப்பட்டாயாவென்றது. சேவலானது என்னகட்டுப்பாடென்று கேட்க மிருகசாதிக்கும் பட்சிசாதிக்கும் இனிமேற் சமாதானமும் உறவும் உண்டாம் ஆனதால் இறங்கிவா என்றது. அப்பொழுது சேவலானது கழுத்தை நீட்டித் தூரத்திற் பார்த்து அதோ இந்த மார்க்கமாய் வேட்டைநாய்கள் வருகிறதுபோலிருக்

கிறது. அவைகள் வந்து சேர்ந்தவுடனே யெல்லா ருஞ் சந்தோஷமாயிருப்போமென்று சொல்ல நரி யோட்டம் எடுத்தது. அப்பொழுது சேவல் ஏன் ஓடுகிறாய் கட்டுப்பாடுண்டென்பது மறந்தாயா என அதற்கு நரியானது எனக்கு மறதியில்லை ஆகிலும் இந்த விளம்பரம் நாய்கள் கேட்டிருக் குமோ இல்லையோ என்று சந்தேகப்படுகிறேன் என்று போய்விட்டது.

---

## உஅ. பாடம்.

### மித்திரபேத தந்திரகதை. க.

---

மீன்களையே மிகுதியுந் தின்று வளர்ந்த ஒரு கிழ க்கொக்கானது குளக்கரையில் வந்து விசனமாய் உட்கார்ந்திருந்தது. அப்பொழுது அதில் இருந்த மீன்கள் கொக்கைப் பார்த்து நீ உன் ஆகாரத்தை விட்டுச் சும்மா உட்கார்ந்திருப்பானேன் சொல் லென கொக்கு நான் மீன் தின்பது மெய்தான் ஆனாலும் இன்றைக்கு இங்கே செம்படவன் வந்து எல்லா மீன்களையும் பிடிக்க இருக்கிறான் இதனால் என்னுடைய இரைகள் எல்லாம் நிர்மூலமாய்ப் போகுமேயென்று ஏங்கிச் சும்மா இருக்கிறேனென இதைக்கேட்டு மீன்கள் எல்லாங் கூட்டங்கூடி எவன் நமக்கு அபாயஞ் சொன்னானோ அவனே உபாயஞ் சொல்லுவானென்று ஆலோசித்துப் பிறகு கொக் கைப் பார்த்து நீயே எங்களை இப்போது இரட்சி யென. கொக்கு நான் செம்படவனோடு சண்டைப ண்ண சமர்த்தன் அல்ல நானோ கிழவன் ஆனாலும் உங்களை வேறோரிடத்திற்குக் கொண்டுபோவேன் அதனால் எனக்கும் இந்தத்தள்ளாமையான காலத் திற் பர உபகாரியென்கிற பெயரும் வரும் நீங்க

ளும் வெகுகாலம்பிழைத்திருப்பீர்களெனஅப்போது அந்தப்பேதைமையான மீன்களெல்லாம் பிராணனைக் காப்பாற்றும் பொருட்டு அதன் பேச்சை நம்பி நல்லது அப்படியே கொண்டுபோகவேணுமெனக் கெஞ்ச பிறகு அந்த வஞ்சனையான கொக்கு நடைக்கு ஒவ்வொன்றாகக் குளத்தில் இருக்கிற மீன்களை எல்லாம் வாயினாற் கவ்விக்கொண்டுபோய்ச் சிலமீன்களைத்தின்று மற்ற மச்சங்களை ஒரு பெரிய பாறையின்மேல் உலரவைத்து பிறகு அந்தக் குளத்தில் இருந்த ஒரு நண்டு இந்தக் கொக்கைப் பார்த்து ஓ சீவகாருணியனே என்னையும் அவ்விடத்திற் கொண்டுபோக வேண்டுமென் வேண்டிக் கொள்ளக் கொக்கு வருங்காலத்திலே எதுவும் வலிய வருமென்று உள்ளுக்குள்ளே சந்தோஷித்து, அப்படியே நண்டையுங் கவ்விக்கொண்டு போகும்பொழுது நண்டு வழியில் மீன்கள் செத்துக்கிடக்கிறதையும் மீன்முட்கள் சிந்திக்கிடக்கிறதையும் பாறையின்மேல் உலருகிறதையும் பார்த்து ஐயோ பலமீன்களையுங் கொன்று நம்மையுங் கொல்லவந்தது. நம்மைக்கொல்வதற்கு முன்னமே நாம் இதைக்கொல்வோமென்று ஒரு உபாயம் நினைத்துக்கொக்கைப்பார்த்து நீ என்னை வருத்தப்பட்டுக் கொண்டுவந்தாய் ஆனாலும் அங்கே என்னுடைய பரிவாரங்கள் இருக்கின்றன் ஆகையால் அங்கே என்னை நீ மறுபடியுங் கொண்டுபோனால் அவைகளையுங் காண்பிப்பேனென் அதைக்கேட்டுக் கொக்கு பேராசைப்பட்டுத் திரும்பி அந்தக்குளத்துக்கு நேரே வருகையில் நண்டு கொடுக்கினால் அந்தக்கொக்கின் கழுத்தை இரண்டுதுண்டாக நறுக்கிக் குளத்திலே வீழ்ந்து சுகமாய் வாழ்ந்தது.

# உ௬. பாடம்.

## மித்திரபேத தந்திரக்கதை. உ.

ஒரு நெருங்கிய காட்டில் மதோன்மத்தன் என்னுஞ் சிங்கமானது அந்தக்காட்டில் இருக்கிற மிருகங்களை எல்லாங் கொன்று தின்று கொழுத்து வெறிகொண்டு திரிகிற நாளில் மிருகங்கள் எல்லாம் ஒன்றுகத்திரண்டுபோய் ஓய் மிருகேந்திரா உன்னுடைய காட்டில் இருக்கிற மிருகங்களை எல்லாம் இப்படிக்கொன்றால் மிருகங்கள் நிருமூலமாய்ப் போம் ஆதலால் தினம் ஒவ்வொன்று உனக்கு இரை கொடுத்துக்கொண்டு வருகிறோம் அதை நீர் பட்சித்துக்கொண்டு இருக்கலாமென்று பிரார்த்திக்கச் சிங்கம் மெய்தானென்று நம்பி அப்படியே செய்கிறேனென்று சத்தியஞ்செய்து கொடுத்தது. பின்பு ஒவ்வொன்றுகத் தின்றுகொண்டு வருநாளில் ஒரு நாள் ஒரு கிழமுயலினுடைய முறைவந்தது அப்பொழுது விலங்குகள் எல்லாங்கூடி இன்றைக்கு உன்முறை போவென்றுசொல்ல முயலானது இன்றைக்கு நமக்கு மரணம்வந்தபடியால் இதற்கு ஓர் உபாயம் யோசிக்கவேண்டும் புத்திமானுக்கு எதுதான் கைகூடாது ஆகையால் இப்பொழுது நாம் உபாயத்தாற் சிங்கத்தைக் கொல்லுவோமென்று ஆலோசித்து மெள்ள அந்தச் சிங்கத்தின் பசிவேளைதப்பி வரச் சிங்கம் பார்த்து முயலே யானையானாலும் என்னுடைய பசிவேளைதப்பி வருகிறதில்லை நீ எவ்வளவு பிராணி, இப்படித் தாமசமாய் வரலாமா என்று மிகுந்த கோபத்தோடு கையைத் தரையிலே மோதிக்கேட்க முயல் ஐயனே! இது என் குற்றமல்ல உன்னுடைய பசிவேளைக்கே வந்

தேன். வந்தவழியில் ஒருபொல்லாத சிங்கத்தைக் கண்டு பயந்து ஒளித்திருந்து அந்தச் சிங்கம் போனபின்பு வந்தேனென்று சொல்லச் சிங்கம் என்னையல்லாமல் இந்தக்காட்டிலே வேறேசிங்கம் நீபார்த்தாயா காட்டுவாவென்று அழைக்க அழைத்துக் கொண்டுபோய்ச் சேறும் நீரும் இருந்த ஒருபாழுங்கிணற்றை இதிலே இருக்கிறதென்று காட்ட சிங்கம் முயலின் பேச்சை நம்பிக் கிணற்றை எட்டிப்பார்த்து அதில் தோன்றின தன் நிழலை அந்தச் சிங்கம் இங்கே இருக்கிறதென்று நினைத்து மிகுந்த கோபத்தோடு அதைக் கொல்லவேண்டுமென்று அதிற் பாய்ந்து சேற்றில் அழுந்தி இறந்தது. ஆகையால் எவன் புத்திமானே அவன் பலவான்.

---

## ௩௰. பாடம்.

நட்புப்பேறு தந்திரக்கதை. ௩.

---

மகததேசத்திற் சண்பகவனத்தில் மானுங் காகமும் ஒன்றுக்கொன்று நட்பாயிருந்தது. அப்படியிருக்கையில் அந்தமான் மனசின்படி புல்லு முதலானவைகளை மேய்ந்து கொழுத்திருக்கிறதை ஒரு நரி பார்த்துத் தனக்குள்ளே ஆலோசிக்கிறது இவன் நமக்கு அசாத்தியமாயிருக்கிறான். ஆகையால் இவனை வஞ்சனையாற் கொல்லவேண்டுமென்று இப்படி நிச்சயித்து அதன் சமீபத்திற்போய்ச் சிநேகிதா சுகமாவென் அதைக்கேட்டு மான் நீயாரென் நரி நான் க்ஷுத்திரபுத்தி என்கிற நரி இந்தக்காட்டில் யாருமற்றபாவியாய் ஒருவனாகத் திரிந்துகொண்டிருந்தேன் இன்றைக்கு உன்னைப்பார்த்து மிகுந்த சந்தோஷத்தை அடைந்தேன் இப்போது உனக்கு வேலைசெய்துகொண்டு உன்னிடத்தில் இருக்க

இச்சிக்கிறேனென் இதைக்கேட்டு மான் நல்லதென்
றது பிறகு பொழுதுபோனவுடனே இரண்டுஞ்
சண்பக மரத்தின்கீழே வந்தன. அம்மரத்தின்மேல்
வாசம்பண்ணிக்கொண்டிருக்கிற மானின் சிநேகி
தனாகிய சுபுத்தியென்னுங் காகம் இவ்விரண்டையும்
பார்த்து மானைக்கேட்கிறது ஓ மித்திரா உன் அண்
டையில் இருக்கிறவன் யாரென் மான் இந்தச் சம்
புகன் என்னுடனே சிநேகித்திருப்பேன், என்கிறா
னென. அப்போது காகம் மித்திரனே சடிதியில்
வந்த வழக்கமில்லாதவனை நம்பலாகாது ஒருவன்
குலமும் நடத்தையுந் தெரியாமல் அவனுக்கு இட
ங்கொடுக்கலாகாது என் அப்போது நரி சொல்லு
கிறது உன்சுபாவம் இவனுக்குச் சிநேகிக்கிறதற்கு
முன்னே தெரியுமா ஆகையால் நல்லோர்களுக்குச்
சுபாவத்தினாலே காரியமில்லை அவர்களுடைய சிநே
கங் கண்டமாத்திரத்திலேயே ஆகிறதென மான் அ
தைக்கேட்டு எப்படி நீ எனக்கு மித்திரனோ அப்ப
டியே இவனும் இருக்கட்டும் நீ ஒன்றுந் தடைசொ
ல்லாதே என்றுசொல்லி நரியைத் தன்னிடத்தில்
வைத்துக்கொண்டது. பிறகு மூன்றுந் தங்கள்மார்
க்கத்தின்படி வயிற்றை நிரப்பிக்கொண்டு ராத்திரி
க்கு அந்த இடத்தில் வந்துகொண்டிருந்தன. இப்
படியிருக்கையில் ஒருநாள் நரி மானைப்பார்த்து
மித்திரா இந்தக்காட்டில் இளவிள என்று நேற்றி
யான பயிர் இருக்கிறது அதை உனக்குக் காண்பிக்
கிறேன் என்று சொல்லி அதை யிட்டுக்கொண்டு
போய்க் காட்டிற்று. அன்றுமுதலாய் அந்தமான்
போய்த் தினமானம் பயிரை மேய்ந்துகொண்டிரு
க்கையில் அதைக் கொல்லைக்காரன்பார்த்து அங்கே
வலைகட்டினான். பின்பு மான் அங்கே வழக்கப்படி
மேயப்போய் அதிற் சிக்கிக்கொண்டு இப்போது
என்னை மித்திரனைத் தவிர யார் விடுவிப்பானென்று

மனதில் எண்ணிக்கொண்டிருக்கையில் அங்கே நரி
வந்து என்னுடைய மனோரதம் நிறைவேறிற்று.
இப்போது நான் இதனெலும்பையும் மாமிசத்தை
யும் நிரம்பத் தின்னுவேனென்று வாயூற மனதில்
எண்ணிக்கொண்டு சும்மா இருந்தது. அதைக்கண்
டு மான்சொல்லுகிறது மித்திரா ஏன் சும்மா இருக்
கிறாய் என்னுடைய தளையை சீக்கிரமாய் அறுத்து
என்னை விடுவி ஏனென்றாற் சங்கடகாலத்திற் சிநே
கிதர்கள் உடையிழந்தவன் கைபோல உதவுகிறார்
களென சம்புகம் ஆம் நீ சொல்வதெல்லாம் மெய்
யே ஆனால் எனக்கு இன்றைக்கு விரததினமாகை
யால் நான் இந்தத் தோல்வலையைத் தீண்டமாட்
டேன். நாளைக்கு என்னசொன்னாலுங் கேட்பேன்
சிநேகிதனுக்காக நான் பிராணனை விடத்தக்கவ
னென்றுசொல்லி அதன் கண்ணுக்குத் தப்பித்துக்
கொண்டு அங்கே ஓரண்டை ஒளித்துக்கொண்டி
ருந்தது. பிறகு காகம் இராத்திரிக்கு மான் வரவில்
லையென்று அதைத் தேடும்பொருட்டு இங்கும் அங்
குந் திரிந்துகொண்டு அங்கே வருகையில் அந்தமா
னின் அவஸ்தையைப்பார்த்துக் கேட்கிறது சிநேகி
தா உனக்கு இந்த அவஸ்தை இப்படியேன் வந்த
தென் மான் உன் வார்த்தையைக் கேளாமையால்
வந்த பலமென காகம் உன் கூட்டாளியான சம்புக
ன் எங்கேபோனானென மான் என்னுடைய இறை
ச்சியைத் தின்கிறதற்காக இங்கேதானே ஒளித்துக்
கொண்டிருப்பானென அதைக்கேட்டுக் காகம்
தனக்கு இதம் பண்ணுகிற மித்திரன் பேச்சைக்கே
ளாதவனுக்கு விபத்து சீக்கிரமாக வரும் பின்னும்
அவன் சத்துருவுக்குச் சந்தோஷம் வருவிக்கிறா
னெனச் சொல்லிக்கொண்டிருக்கையிற் கொல்லைக்
காரன் கையில் ஒரு தடியை யெடுத்துக்கொண்டுவ
ர அவனைப்பார்த்துக் காகம் மானுக்குச்சொல்லுகி

றது மித்திரா நீ இப்போது மூச்சை அடக்கிக்கொண்டு செத்தவனைப்போலக்கிடந்தால் அவன் உன்னைப்பார்த்து நீ செத்தாய் என்றெண்ணிக்கொண்டு கட்டிய வலையை அவிழ்த்துச்சுருட்டி வேறோரிடத்தில் வைக்கப்போவான். அப்போது நான்கத்துகிறேன் அதைக்கேட்டமாத்திரத்தில் நீ மிகவும் விரைவாய் ஓட்டம்பிடியென்று சொல்லித் தான் அப்படியே யொய்யாக மானின் கண்ணைக் குத்திக்கொண்டிருந்தது. இதற்குள்ளே வந்த கொல்லைக்காரன் மானைப்பார்த்து இதுசெத்தது என்றெண்ணிக்கட்டியிருந்த வலையை அவிழ்த்து ஓரிடத்தில் ஒன்றாகக்கூட்டிவைக்கப்போனான் காகம் அதைப்பார்த்துச் சங்கேதப்படி கத்த மான் அதைக்கேட்டவுடனே ஓட்டம்பிடித்தது. அதைக்கொல்ல நினைத்து அந்தக்குடியானவன் தடியை விசிறியெறிய அதுபதிவிருந்த நரிமேற்பட்டு இறந்தது.

---

## வெற்றிவேற்கை.

வெற்றிவேற்கை வீரராமன்
கொற்கையாளி குலசேகரன் புகல
நற்றமிழ்தெரிந்த நறுந்தொகைதன்னால்
குற்றங்களைவோர் குறைவிலாதவரே.

எழுத்தறிவித்தவன் இறைவனாகும்
கல்விக்கழகு கசடறமொழிதல்
செல்வத்திற்கழகு செழுங்கிளை தாங்குதல்
வேதியர்க்கழகு வேதமு மொழுக்கமும்
மன்னவர்க்கழகு செங்கோன் முறைமை.

பெண்டிர்க்கழகெதிர் பேசாதிருத்தல்
குலமகட்கழகுதன் கொழுநனைப்பேணுதல்

அறிவோர்க்கழகு கற்றுணர்ந்தடங்கல்
வறியோர்க்கழகு வறுமையிற்செம்மை.

அதனால்,

தேம்படுபனையின் றிரள்பழத்தொருவிதை
வானுறவோங்கி வளம்பெறவளரினும்
ஒருவர்க்கிருக்க நிழலாகாதே.

தெள்ளியவாலின் சிறுபழத்தொருவிதை
தெண்ணீர்க்கயத்துச் சிறுமீன் சினையினும்
நுண்ணிதேயாயினும் அண்ணல்யானை
அணிதேர்ப்புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க்கிருக்க நிழலாகும்மே.

அதனால்,

சிறியோரெல்லாஞ் சிறியருமல்லர்
பெரியோரெல்லாம் பெரியருமல்லர்
பெற்றோரெல்லாம் பிள்ளைகளல்லர்
உற்றோரெல்லாம் உறவினரல்லர்.

அடினுமாவின்பாற் றன்சுவைகுன்றாது
சுடினுஞ் செம்பொன் றன்னொளிகெடாது
அரைக்கினுஞ் சந்தனந் தன்மணமறாது
புகைக்கினுங்காரகிற் பொல்லாங்கு கமழாது
கலக்கினுந்தண்கடல் சேறாகாது
பெருமையுஞ் சிறுமையும் தான்றரவருமே

சிறியோர்செய்த சிறுபிழையெல்லாம்
பெரியோராயிற் பொறுப்பதுகடனே
சிறியோர்பெரும்பிழை செய்தனராயிற்
பெரியோரப்பிழை பொறுத்தலுமரிதே.

வாழியநலனே வாழியநலனே
நூறுண்டுபழகினு மூர்க்கர்கேண்மை

நீர்க்குட்பாசிபோல் வேர்க்கொள்ளாதே
ஒருநாட்பழகினும் பெரியோர்கேண்மை
இருநிலம்பிளக்க வேர்வீழக்கும்மே.

கற்கைநன்றே கற்கைநன்றே
பிச்சைபுகினுங் கற்கைநன்றே
கல்லாவொருவன் குலநலம்பேசுதல்
நெல்லினுட்பிறந்த பதராகும்மே.

நாற்பாற்குலத்தின் மேற்பாலொருவன்
கற்றிலனாயிற் கீழிருப்பவனே
எக்குடிப்பிறப்பினும் யாவரேயாயினும்
அக்குடியிற்கற்றோ ரைவருகென்பார்.

அச்சமுநாணமும் அறிவிலோர்க்கில்லை
நாளுங் கிழமையும் நலிந்தோர்க்கில்லை
கேளுங் கிளையுங் கெட்டோர்க்கில்லை
உடைமையும் வறுமையும் ஒருவழிநில்லா.

குடைநிழலிருந்து குஞ்சரமூர்ந்தோர்
நடைமெலிந்தோரூர் நண்ணினுநண்ணுவர்
சிறப்புஞ் செல்வமும் பெருமையுமுடையோர்
அறக்கூழ்ச்சாலை அடையினுமடைவர்
அறத்திடுபிச்சை கூவியிரப்போர்
அரசோடிருந்தர சாளினுமாளுவர்.

குன்றத்தனையிரு நிதியைப்படைத்தோர்
அன்றைப்பகலே அழியினுமழிகுவர்
எழுநிலைமாடங் கால்சாய்ந்துக்குக்
கழுதைமேய பாழாகினுமாகும்.

தறுகண்யானை தான்பெரிதாயினும்
சிறுகண்மூங்கிற் கோற்கஞ்சும்மே

குன்றுடைநெடுங்காட் டூடேவாழினும்
புன்றலைப்புல்வாய் புலிக்கஞ்சும்மே.

ஆனையாம்பள்ளத் தூடேவாழினும்
தேரைபாம்பிற்கு மிகவஞ்சும்மே
கொடுங்கோன் மன்னர் வாழுநாட்டிற்
கடும்புலிவாழுங் காடுநன்றே
சான்றோரில்லாத் தொல்பதியிருத்தலிற்
றென்றேர்குறவர் தேயநன்றே

வித்துமேரு முளவாயிருப்ப
எய்த்தங்கிருக்கு மேழையும்பதரோ
காலையுமாலையு நான்மறையோதா
அந்தணரென்போ ரனைவரும்பதரோ
முதலுளபண்டங் கொண்டுவாணிபஞ்செய
தன்பயனுண்ணு வணிகரும்பதரோ.

தன்னாயுதமுந் தன்கையிற்பொருளும்
பிறன்கையிற்கொடுக்கும் பேதையும்பதரோ
வாய்ப்பறையாகவு நாக்கடிப்பாகவும்
சாற்றுவதொன்றைப் போற்றிக்கேண்மின்.

பொய்யுடையொருவன் சொல்வன்மையினால்
மெய்போலும்மே மெய்போலும்மே
மெய்யுடையொருவன் சொன்மாட்டாமையால்
பொய்போலும்மே பொய்போலும்மே.

பழியாவருவது மொழியாதொழிவது
சுழியாவருபுனல் விழியாதொழிவது
துணையோடல்லது நெடுவழிபோகேல்
புணைமீதல்லது நெடும்புனலேகேல்

வழியேயேகுக வழியேமீளுக
இவைகாணுலகிற் கியலாமாறே.

## மூதுரை.

நன்றியொருவற்குச் செய்தக்கா லந்நன்றி
யென்றுதருங்கொ லெனவேண்டா நின்று
தளரா வளர்தெங்கு தாளுண்ட நீரைத்
தலையாலேதான் றருதலால்.

நல்லாரொருவருக்குச் செய்த வுபகாரங்
கன்மே லெழுத்துப்போற் காணுமே யல்லாத
வீரமில்லா நெஞ்சத்தார்க் கீந்தவுபகார
நீர்மே லெழுத்திற்கு நேர்.

அற்றகுளத்தி னறுநீர்ப் பறவைபோ
லுற்றுழித் தீர்வா ருறவல்ல ரக்குளத்திற்
கொட்டியு மாம்பலு நெய்தலும் போலவே
யொட்டியுறுவா ருறவு.

## நன்னெறி.

பிறர்க்குதவிசெய்யார் பெருஞ்செல்வம்வேறு
பிறர்க்குதவி யாக்குபவர் பேறும் பிறர்க்குதவி
செய்யாக் கருங்கடனீர் சென்றுபுயன் முகந்து
பெய்யாக் கொடுக்கும் பிறர்க்கு.

## நல்வழி.

ஒருநாளுணவை யொழியென்றா லொழியா
யிருநாளைக்கே லென்றா லேலா யொருநாளு

மென்னோ வறியா யிடும்பை கூரென்வயிறே
யுன்னோடுவாழ்த லரிது. [த்திற்

வெட்டெனவு மெத்தெனவை வெல்லாதாம் வேழ
பட்டுருவுங்கோல்பஞ்சிற்பாய்ந்து நெட்டிருப்புப்
பாரைக்குநெக்குவிடாப் பாறை பசுமரத்தின்
வேருக்கு நெக்கு விடும்.

முற்றும்.

INDIAN INSTITUTE OXFORD